# தமிழன்
THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 33 சுபகிருது வருடம், ஆடி மாதம் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(05.08.2022) ஹிஜ்ரி - 1444, முஹர்ரம் - 06 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50


## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வாழ்த்தினார் எலிசபெத் மகாராணி



02 பக்கம்



## நீதிமன்ற குற்றவாளிக்கூண்டில் நின்றவர் மீது துப்பாக்கிச் சூடு

### கல்கிசையில் திகில் சம்பவம்

02 பக்கம்

## மனித உரிமைகளை மதியுங்கள்!

### எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் தலைவர்கள் அரசிடம் கோரிக்கை

யோ.தர்மராஜ்

மக்களின் சிவில் உரிமைகள், மனித உரிமைகள் மற்றும் வாழ்வதற்கான உரிமைகளை மீறி மக்களுக்கு எதிராக அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் அடக்குமுறைகளுக்கு எதிர்ப்பை தெரிவிப்பதோடு, இவ்வாறான மோசமான செயற்பாடுகளிலிருந்து விலகி, மக்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் செயற்படுமாறு ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத்துக்கு எதிர்க்கட்சிகள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், சுயாதீன குழு உறுப்பினர் அநுர பிரியதர்சன யாப்பா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஸ்ணன் ஆகியோர் இவ்வாறு கூட்டாக வலியுறுத்தினர்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

**சஜித் பிரேமதாச**

மக்களுக்கு எதிராக அரசாங்கம் முன்னெடுக்கும் அடக்குமுறையை வன்மையாகக் கண்டிப்பதுடன், மக்களின் சிவில் உரிமைகள், மனித உரிமைகள் மற்றும் வாழ்வதற்கான உரிமைகளை மீறி மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் அடக்குமுறைகளுக்கு எதிர்ப்பைத் தெரிவிப்பதோடு, இவ்வாறான மோசமான செயற்பாடுகளிலிருந்து விலகி, மக்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் செயற்படுமாறு ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத்துக்கு வலியுறுத்துகின்றோம்.

நாட்டு மக்களுக்கு தங்களின் விரும்பிய அரசியலை முன்னெடுக்க, சுதந்திரமாக கருத்து தெரிவிக்க, ஒன்றுகூடுவதற்கு, போராட்டம் நடத்துவதற்கு, பாத யாத்திரை செல்வதற்கும் உரிமையுண்டு. அதனை யாராலும் மீறமுடியாது. எனினும், மக்களை அச்சுறுத்தும் வகையில், அரச பயங்கரவாத மற்றும் காட்டுமிராண்டித்தனத்துடன் அரசாங்கம் செயற்படுகின்றது. இதனை எங்களால் ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

02 பக்கம்

## மழை காரணமாக 4 உயிர்ப்பலிகள்

### 986 வீடுகள் சேதம்

கடந்த சில நாட்களாக பெய்த கடும் மழை, அதனால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக 986 வீடுகள் சேதமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. 02 பக்கம்

## அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் சரிவு

பருப்பு, சீனி, கிழங்கு, வெங்காயம், மிளகாய் போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை கணிசமாக குறைந்துள்ளதாக புறக்கோட்டை வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது. 02 பக்கம்

## தானிஷ் அலிக்கு மேலும் 14 நாட்கள் சிறை

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தானிஷ் அலிக்கு மெகசின் சிறைச்சாலையில் கையடக்கத் தொலைபேசியை பயன்படுத்திய குற்றச்சாட்டுக்காக 14 நாட்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்

## பஸ் கட்டணங்கள் நேற்று நள்ளிரவு முதல் குறைப்பு



யோ.தர்மராஜ்

தேசிய பொதுப் போக்குவரத்து ஆணைக்குழுவின் நிபந்தனைகளுக்கமைய சாதாரண பஸ் கட்டணம் 11.14 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. அதன்படி, நேற்று நள்ளிரவு முதல் 38 ரூபாவாகவுள்ள ஆரம்ப கட்டணம் 34 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளதுடன், 350ஆவது பஸ் கட்டணமாகவுள்ள 2 ஆயிரத்து 882 ரூபா தற்போது 2 ஆயிரத்து 611 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளதாக தேசிய பொதுப் போக்குவரத்து ஆணைக்குழு பணிப்பாளர் நாயகம் கலாநிதி நிலான் மிராண்டா தெரிவித்தார். 02 பக்கம்

## துப்பாக்கிச்சூடுகள் குறித்து உடன் விசாரணை வேண்டும்

### இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

நாட்டில் இடம்பெறும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் மற்றும் காலிமுகத்திடல் கடற்கரையில் கண்டெடுக்கப்பட்ட சடலங்கள் தொடர்பில் உடனடியாக முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவிடம் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் அண்மைய நாட்களில் பதிவான பல நபர்களின் மரணத்திற்கு காரணமான துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் தொடர்பாக சட்டத்தரணிகள் சங்கம், பொலிஸ் மா அதிபரின் கவனத்துக்கு கொண்டுசென்றுள்ளது.

அத்துடன், கரையோரப் பகுதிகளில் குறிப்பாக, காலிமுகத்திடலை அண்மித்த பகுதிகளில் சடலங்கள் கரையொதுங்குவது தொடர்பில் ஊடகங்களில் வெளியான செய்திகள்... 02 பக்கம்

## ஜனாதிபதி ரணிலுக்கு வாக்களித்த கறுப்பாடுகளை கண்டுபிடியுங்கள்

### இன்றேல் 10 பேரும் இராஜினாமா செய்யுங்கள்

### தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர் அரசரெத்தினம் வலியுறுத்து

- பாறுக் ஷிஹான்-

''கடந்த ஜனாதிபதித் தெரிவில் எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து ரணிலுக்கு வாக்களித்ததாகக் கூறப்படும் கறுப்பாடுகளை உடனடியாக கண்டுபிடியுங்கள். இது கட்சிக்கும் மக்களுக்கும் செய்த துரோகம். முடியாவிட்டால் நீங்கள் 10 பேரும் இராஜினாமா செய்யுங்கள்" - என காரைதீவில் இடம்பெற்ற இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களுக்கான கூட்டத்தில்... 02 பக்கம்



## ஜோசப் ஸ்டாலின் கைதுக்கு ஐ.நா. மனித உரிமைகள் அறிக்கையாளர் கண்டனம்!

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கைது செய்யப்பட்டமை தொடர்பில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் தொடர்பான விசேட அறிக்கையாளர் மேரி லோலர் கேள்வி எழுப்பியுள்ளார்.

நீதிமன்ற உத்தரவை மீறி அரசுக்கு எதிராக போராட்டம் நடத்தியதாக ஸ்டாலின் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டார்.

“பிரபல மனித உரிமைகள் பாதுகாவலர் ஜோசப் ஸ்டாலின் கைது செய்யப்பட்டார் என்று இலங்கையிலிருந்து குழப்பமான செய்திகளை நான் கேட்கிறேன்” என்று அவர் நேற்று முன்தினம் ட்விட்டர் செய்தியில் தெரிவித்தார்.

ஜோசப் ஸ்டாலின் போன்ற மனித உரிமைப் பாதுகாவலர்களின் பணி சமீபத்திய வாரங்களில் முன்னெப்போதையும் விட முக்கியமானது என்று மேரி லோலர் மேலும் கூறினார்.

மனித உரிமைப் பாதுகாவலர்களின் இத்தகைய செயற்பாடுகள் ஆதரிக்கப்பட வேண்டுமே தவிர, தண்டிக்கப்படக்கூடாது என்றும் அவர் மேலும் கூறினார்.




## போராட்டக்காரர்களை அச்சுறுத்த அவசரகாலச் சட்டம் பயன்பாடு

### இலங்கை அரசு மீது மனித உரிமைகள் கண்காணிப்பகம் விசனம்

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல், பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்புக்கூற வலியுறுத்தி போராட்டங்களில் ஈடுபடுவோரை துன்புறுத்துவதற்கும், தன்னிச்சையாக கைது செய்து தடுத்துவைப்பதற்கும் இலங்கை அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்துவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றஞ்சாட்டியுள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்கள், சிவில் சமூக ஆர்வலர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் பத்திரிகையாளர்களை மிரட்டுதல்,... 02 பக்கம்






காலிமுகத்திடல் போராட்டக்காரர்களை இன்று மாலைக்குள் வெளியேறுமாறு பொலிஸார் விடுத்த கோரிக்கையினையடுத்து ஒரு தரப்பினர் அங்கிருந்து வெளியேறத் தயாராகி கூடாரங்களை அகற்றும் காட்சி. (படப்பிடிப்பு - பிரதீப் தம்பரகே)

## நாடுகளின் உள் விவகாரங்களில் இதர நாடுகள் தலையிடக் கூடாது

### சீனத் தூதுவருடனான சந்திப்பில் வலியுறுத்தினார் ஜனாதிபதி

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சீனத் தூதுவர் சீ சென்ஹொங் (Qi Zhenghong)வுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று (04) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்த சீனத் தூதுவர், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடினார். 02 பக்கம்

## உஷ்



ஜனாதிபதி மாளிகைக்குள் அத்துமீறி பிரவேசித்தார் என்ற குற்றச்சாட்டில் மட்டக்களப்பின் முன்னாள் எம்.பி. மௌலானாவின் மகனை சி.ஐ.டி. தேடுகிறதாம். ஆனால், மகனை காப்பாற்ற தந்தையாரோ ரணிலின் உதவியை நாடியுள்ளதாக தகவல். விடயம் செட்டில் ஆகுமென தகவல் அடிபடுகிறது.

## காலிமுகத்திடல் போராட்டக்காரர்களை அகற்றும் முயற்சிக்கு எதிராக ரிட் மனுக்கள்

காலிமுகத்திடலில் இருந்து இன்று மாலை 5 மணிக்குள் வெளியேறுமாறு பொலிஸார் வழங்கிய பணிப்புரையை இடைநிறுத்துமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் நான்கு ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

காலிமுகத்திடலில் உள்ள ஆர்ப்பாட்டக்காரர்களை அனைத்து கட்டமைப்புகளையும் அகற்றிவிட்டு அப்பகுதியை காலி செய்யுமாறு கொழும்பு கோட்டை பொலிஸார் நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளனர்.

இன்று மாலை 5 மணிக்குள் போராட்டக்காரர்கள் வெளியேற வேண்டும் என கோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

போராட்டக்காரர்கள் சட்டத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்றும், பொது அமைதிக்கு இடையூறு விளைவிப்பதை தவிர்க்க வேண்டும் என்றும் கோட்டை பொலிஸாரின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

02 பக்கம்

## அதிவேக நெடுஞ்சாலைக்குள் நுழைவதற்கு முன் எரிபொருள் அளவை பரிசீலியுங்கள்

### வீதி அபிவிருத்தி அதிகாரசபை சாரதிகளிடம் கோரிக்கை

அதிவேக நெடுஞ்சாலையில் நுழைவதற்கு முன், வாகன சாரதிகளிடம் போதிய எரிபொருள் உள்ளதா என மதிப்பிடுமாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபை, சாரதிகளிடம் கோரியுள்ளது.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த வீதி அபிவிருத்தி அதிகாரசபை பணிப்பாளர்... 02 பக்கம்



## கமெண்ட் கந்தர்..

தமிழ்க் கூட்டமைப்பில மட்டுமில்ல... எல்லா கட்சிகளுக்குள்ளயும் கறுப்பாடுகள் இருக்குது பாருங்கோ...



# ஜோசப் ஸ்டாலின் கைதுசெய்யப்பட்டமைக்கு ஆசிரியர் விடுதலை முன்னணி கண்டனம்

(தலவாக்கலை நிருபர்)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலினின் கைது வன்மையாக கண்டிக்கத்தக்கது என ஆசிரியர் விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் என்.டி.எஸ். நாதன் தெரிவித்துள்ளார்.

ஜோசப் ஸ்டாலின் நேற்று முன்தினம் (03) சங்கத்தின் தலைமையகத்தில் வைத்து கொழும்பு கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில்.

இது ஒரு திட்டமிட்ட செயல். இது அரசியல் சூழ்ச்சிக்காக இடம்பெற்ற கைதாகவே நாங்கள் கருதுகிறோம். இதனை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.



ஜோசப் ஸ்டாலின் ஆசிரியர்களுக்காக மட்டுமன்றி பொது மக்களுக்காகவும் குரல் கொடுக்கும் ஒருவர். சமூக செயற்பாட்டாளரான ஜோசப் ஸ்டாலின் பல்வேறு போராட்டங்களுக்கு தலைமை வகித்துள்ளார்.

இவர் எங்களுடன் இணைந்து பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டுள்ளார். போராட்டம் நடத்துவது எமது உரிமை. அதற்காக அவர் கைது செய்யப்பட்டுள்ளமை மிகவும் வருத்தமளிக்கின்றது. எனவே அவர் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும் என்றார்.

# நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கு நகைகள் அணிந்து வர வேண்டாம்

## திருடர்கள் அதிகரித்துள்ளதால் பக்தர்களிடம் பொலிஸார் வேண்டுகோள்

(யாழ். செய்தியாளர்)

நல்லூர் கந்தன் ஆலயத்திற்கு வருகைதரும் பக்தர்கள் தங்க ஆபரணம் அணிந்து வருவதை தவிர்த்துக் கொள்ளுங்கள் எனவும், திருட்டுச்களில் ஈடுபட வெளிமாவட்ட கும்பல்கள் ஊடுருவி உள்ளதாக புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளதாக யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உஜித் லியனகே தெரிவித்தார்.

யாழில் நேற்று வியாழக்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 1ஆம் திகதியில் இருந்து நல்லூர் கந்தன் ஆலய வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகி இடம்பெறுகின்றது. ஆலய வளாகத்தில் தேவையானளவு பாதுகாப்பு பொலிஸாரினால் வழங்கப்பட்டுள்ளது.

அத்தோடு, விசேட பொலிஸ் அணியும் இங்கே வரவழைக்கப்பட்டு பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

ஆனாலும், ஆலயத்திற்கு வருகின்ற பக்தர்கள் தங்க ஆபரணங்கள் அணிந்து ஆலயத்திற்கு வருவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

ஏனென்றால், அதிக மக்கள் கூடும் இடத்தில் திருட்டுச் சம்பவங்களும் இடம்பெறலாம். இந்த திருட்டுச் ச் சம்பவங்கள் இடம்பெறாமல் தடுப்பதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும்.

திருட்டுச் சம்பவங்களை மேற்கொள்வதற்கு வெளி மாவட்டங்களிலிருந்து ஒரு சிலர் குழுக்களாக ஊடுருவி இருக்கலாம். எனவே ஆலயத்திற்கு வருவோர் நகைகள் மற்றும் அதிக பணங்களை ஆலயத்திற்கு எடுத்து வருவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

அத்தோடு திருட்டுச் சம்பவங்கள், திருட்டுச் சந்தேக நபர்கள் தொடர்பில் தகவல் தெரிந்தால் பொலிஸாரிடம் உடனடியாக தெரியப்படுத்துங்கள்.

கடந்த வாரத்தில் யாழ்ப்பாண பொலிஸ் பிராந்தியத்தில் சில திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அந்த சம்பவங்களை நாங்கள் விசாரணைகளை முன்னெடுத்தபோது, பொதுமக்களின் கவனயீனத்தின் காரணமாக இந்த திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

குறிப்பாக, தங்களுடைய வீடுகள் ஜன்னல்களை ஒழுங்காக பூட்டாமல் வெளியில் செல்லுதல், அல்லது பூட்டிவிட்டு திறப்பினை பாதுகாப்பில்லாத இடத்தில் வைத்தல் போன்ற சம்பவங்களால் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. எனவே பொதுமக்கள் தமது உடைமைகள் தொடர்பில் அதிக கவனமாக இருங்கள்.

அத்தோடு, தற்போதைய காலகட்டத்தில் டெங்கு மற்றும் கொரோனா தொற்று அதிகரித்து காணப்படுகின்றது.

எனவே, கடந்த காலங்களில் பொலிஸாருக்கு மற்றும் சுகாதாரப் பிரிவினருக்கு பொது மக்கள் நீங்கள் ஒத்துழைப்பு வழங்கியதைபோல தற்போதுள்ள நிலையிலும் பொலிஸார் மற்றும் சுகாதாரப் பிரிவினருக்கு நோய் தொற்றிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு உரிய ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## காலிமுகத்திடல்...

இந்த அறிவிப்பிற்கு செவிசாய்க்கத் தவறும் நபர்கள் சட்ட நடவடிக்கைக்கு ஆளாக நேரிடும் என்றும் கோட்டை பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

அதன்படி, போராட்டக்காரர்களுக்கு பொலிஸார் பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

## மழை காரணமாக...

நாட்டின் 10 மாவட்டங்களில் 3,037 குடும்பங்களைச் சேர்ந்த 12,829 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 480 குடும்பங்களைச் சேர்ந்த 2,313 பேர் 15 பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி நிலையம் தெரிவித்துள்ளது .

இரத்தினபுரி, நுவரெலியா, கண்டி, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, கேகாலை, மாத்தளை, கம்பஹா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் மக்கள் இந்த நிலைமையால் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக இரத்தினபுரி மற்றும் கண்டி மாவட்டங்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளன. வெள்ளம் மற்றும் நிலச்சரிவு காரணமாக இந்த மாவட்டங்களில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வெள்ளம் மற்றும் மண்சரிவினால் நால்வர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஒருவர் காணாமல் போயுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

## அத்தியாவசியப் பொருட்களின்...

அதன்படி, ரூ.600 ஆக இருந்த பருப்பு மொத்த விலை ரூ.410 ஆகவும், ரூ.330ஆக இருந்த சீனியின் மொத்த விலை ரூ.270ஆகவும், ரூ.215ஆக இருந்த உருளைக்கிழங்கின் மொத்த விலை ரூ.150ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது. 600ரூபாவாக இருந்த வெங்காயத்தின் மொத்த விலை 420ரூபாவாகவும், 1900 ரூபாவாக இருந்த மிளகாய் விலை 1300ஆகவும் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், டொலரின் ஸ்திரத்தன்மை மற்றும் வங்கிகள் டொலர்களை வழங்குவதால் அத்தியாவசியப் பொருட்களின் விலை குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## தானிஷ் அலிக்கு மேலும்...

தேசிய தொலைக்காட்சி கலையகத்துக்குள் பிரவேசித்து, ஒளிபரப்பு நடவடிக்கைக்கு இடையூறு ஏற்படுத்தியதாக, குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள தானிஷ் அலி, எதிர்வரும் 15ஆம் திகதிவரை மீள விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதன்படி, கொழும்பு மெகசின் சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள தானிஷ் அலி சிறைச்சாலைகள் விதிமுறைகளை மீறி தொலைபேசி பயன்படுத்திய குற்றச்சாட்டில் சிறைச்சாலை நீதிபதி முன் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போது, தானிஷ் அலி தமது குற்றத்தை ஒப்புக்கொண்டமையை அடுத்து, அவர் 14நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு வெலிக்கடை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார்.

## நீதிமன்ற குற்றவாளிக் கூண்டில்...

கல்கிஸை நீதவான் நீதிமன்ற குற்றவாளி கூட்டில் இருந்த ஒருவர் மீது நேற்று துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்ட நபர் அவ்விடத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

தப்பியோடிய நேரத்தில், சந்தேக நபர் பயமுறுத்துவதற்காக வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டார். துப்பாக்கிச் சூட்டில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

இதுதொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

## ஜனாதிபதி ரணில்...

புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு, இரண்டாம் எலிசபெத் மகாராணி தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார். இலங்கை மற்றும் பிரித்தானியாவிற்கு இடையிலான நட்புறவை தொடர்வதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் எலிசபெத் மகாராணி குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் எதிர்கால செயற்பாடுகளுக்கும் வெற்றிகளுக்கும் நாட்டு மக்களின் சௌபாக்கியத்திற்கும் வாழ்த்துகளை நல்குவதாக தனது வாழ்த்துச் செய்தியில் மகாராணி குறிப்பிட்டுள்ளார்.

## நாடுகளின் உள்...

''ஒரு சீனா கொள்கை" தொடர்பில் இலங்கையின் கடைபிடிப்பு மற்றும் ஐக்கிய நாடுகளின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு பற்றிய சாசனக் கோட்பாடுகளுக்கான இலங்கையின் அர்ப்பணிப்பையும் ஜனாதிபதி விக்ரமசிங்க, மீண்டும் வலியுறுத்தினார்.

"தற்போதைய உலகளாவிய பதற்றங்களை மேலும் அதிகரிக்கும் ஆத்திரமூட்டல்களை நாடுகள் தவிர்க்க வேண்டும். பரஸ்பர மரியாதை மற்றும் நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடாமை, அமைதியான ஒத்துழைப்பு மற்றும் மோதலின்மைக்கு ஒரு முக்கிய அடிப்படையாக அமையும்" என்றும் இங்கு குறிப்பிடப்பட்டது.

## போராட்டக்காரர்களை...

கண்காணித்தல் மற்றும் தன்னிச்சையாக கைது செய்தல் போன்ற செயற்பாடுகள் மூலம் அரசுக்கு எதிரான போராட்டங்களை தடுக்க முயற்சிகள் இடம்பெறுவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைதிப் போராட்டக்காரர்கள் மீதான இலங்கை அரசாங்கத்தின் அடக்குமுறையானது, நாட்டின் அவசர பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண வேண்டிய அவசியத்திலிருந்து கவனத்தைத் திசைதிருப்பும் தவறான மற்றும் சட்டவிரோத முயற்சியாகத் தோன்றுகிறது என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஆழமாக வேரூன்றியிருக்கும் பொருளாதாரப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு மனித உரிமைகளை மதிக்கும் அரச நிர்வாகத்துடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்பதில் இலங்கையின் சர்வதேச பங்காளிகள் தெளிவாக இருக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். தங்கள் மீதான அச்சுறுத்தல் மற்றும் கண்காணிப்பு அதிகரித்துள்ளதாக சட்டத்தரணிகள் மற்றும் ஊடக நிறுவனங்களைச் சேர்ந்தோர் மனித உரிமைகள் கண்காணிப்பகத்திடம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான நிலையில், சர்வதேச தரத்திற்கு முரணான அவசரகாலச் சட்டத்தின் விதிகள் உடனடியாக இரத்துச் செய்யப்பட வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

## அதிவேக நெடுஞ்சாலைக்குள்...

நாயகம் எல்.வி.எஸ். வீரக்கோன் கூறுகையில், அதிவேக நெடுஞ்சாலைகளில் எரிபொருள் இல்லாத காரணமாக வாகனங்கள் இடைநடுவில் நிற்கும் சம்பவங்கள் குறித்து பராமரிப்புப் பிரிவினருக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக குறிப்பிட்டார்.

அதிவேக நெடுஞ்சாலைகளில் நிறுத்தப்படாமல், மற்ற வாகன ஓட்டிகளுக்கு சிரமத்தை ஏற்படுத்தாமல், இலக்குகளை அடைவதற்கு போதுமான எரிபொருள் உள்ளதா என்பதை வாகன சாரதிகள் அளவிடுமாறு அவர் அழைப்பு விடுத்தார்.

அரசாங்கம் எரிபொருளை வழங்குவதால், வாகன ஓட்டிகள் எரிபொருளின் அளவு குறித்து கவனம் செலுத்துமாறு வீரக்கோன் கேட்டுக்கொண்டார். எரிபொருள் தட்டுப்பாடு உள்ளிட்ட பல சிரமங்களுக்கு மத்தியில் பராமரிப்பு பிரிவும் இயங்கி வருகிறது என்றார்.

எனவே, விபத்து ஏற்பட்டால் ஒரு இடத்தை அடைவதற்கும், மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருள் வளங்களைப் பயன்படுத்தி நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கும் முன்னுரிமை அளிக்கவேண்டியுள்ளதாக வீரக்கோன் கூறினார்.

உதிரி டயர்கள் மற்றும் டூல் கிட்கள் குறித்து வாகன ஓட்டிகள் கவனமாக இருக்க வேண்டும் என்றும் அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

## துப்பாக்கிச்சூடுகள்...

தொடர்பிலும் அச்சங்கம், பொலிஸ் மா அதிபரின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளார்.

இவை தொடர்பில் அதிகாரிகளிடமிருந்து எந்த விளக்கமும் கிடைக்காத நிலையில், இதுபோன்ற சடலங்கள் கரையொதுங்குவது பொதுமக்களின் ஒரு பிரிவினரிடையே அச்சத்தை ஏற்படுத்தியதை அவதானித்துள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பில் பொதுமக்களின் நம்பிக்கை பேணப்படுவதையும், இலங்கையின் நற்பெயருக்கு பாதகமான பாதிப்பு ஏற்படாமல் இருப்பதையும் உறுதி செய்வதற்கு இந்த இரண்டு விடயங்கள் தொடர்பிலும் உடனடியாக விசாரணை நடத்த வேண்டியதன் அவசியத்தை பொலிஸ் மா அதிபருக்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

## மனித உரிமைகளை...

ஜனநாயகத்தை மதிக்கும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகளாக இதனை வன்மையாக கண்டிக்கின்றோம். பாதிக்கப்படும் தொழிற்சங்கத் தலைவர்கள், மக்கள் தலைவர்கள், பொதுமக்களின் நிலைப்பாட்டை பிரதிபலிக்கும் சிவில் உரிமையாளர்கள் போன்ற அமைதியான போராட்டக்காரர்களுக்காக எவ்வித நிபந்தனையுமின்றி முன்வருவோம்.

முழு நாட்டு மக்களும் ஒன்றிணையும் சந்தர்ப்பமாகும். எனினும், மக்களின் வரப்பிரசாதங்களை அவர்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு ஒன்றிணைய வேண்டுமே தவிர, எங்களுடைய வரப்பிரசாதங்களை பெற்றுக்கொள்வதற்காக அல்ல. நாங்கள் தற்காலிக சேவையாளர்கள். இதனையும் மக்களே தீர்மானிப்பார்கள். எனவே, மக்களின் உரிமை மற்றும் அவர்களின் நிலைப்பாடே எங்களுக்கு முக்கியமாகும். மக்களுக்கு எதிராக முன்னெடுக்கும் அடக்குமுறையை உடனடியாக நிறுத்தவேண்டும்.

### எம்.ஏ.சுமந்திரன்

ஆட்சிக்கு வந்துள்ள புதிய அரசாங்கம் ஒருவகை அடக்குமுறையை பிரயோகித்துக் கொண்டிருக்கிறது. மக்கள் எழுச்சிப் போராட்டம் ஊடாக நாட்டில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த அரசாங்கமும் அந்த மாற்றத்தின் ஊடாகவே ஆட்சிக்கு வந்துள்ளது. போராட்டக்காரர்களின் முதுகில் ஏறி ஆட்சியில் அமர்ந்தவர்கள், இன்று அந்த போராட்டக்காரர்களை வேட்டையாடுவதை ஒருபோதும் எங்களால் அனுமதிக்க முடியாது.

இந்த போராட்டம் ஆரம்பத்தில், அமைதியாக, வன்முறையற்றிருந்ததாக ஜனாதிபதி தன்னுடைய அக்கிராசன உரையில் சான்றிதழ் கொடுத்திருந்தார். ஆனால், இந்த போராட்டத்தை ஆரம்பத்திலிருந்து வழிநடத்திய தலைவர்களை அரசாங்கம் வேட்டையாடுவதுடன், கைதுசெய்கிறது.

நாட்டில் அனைவராலும் அறியப்பட்ட சிறந்த தொழிற்சங்கவாதியான ஜோசப் ஸ்டாலினை கைதுசெய்ததை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இவ்வாறான கைதுகள் உடனடியாக நிறுத்தப்படுவதுடன், ஏற்கனவே கைதுசெய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்பட வேண்டும். அமைதியான போராட்டத்தை நடத்துவதற்கு அனைவருக்கும் உரிமையுண்டு. அது சட்டவிரோத செயலல்ல. எனவே, அரசாங்கம் பொருளாதார பிரச்சினைகளிலிருந்து மீள்வதற்கு எடுக்க வேண்டிய விடயங்களை எடுக்காது, மக்களை திசைத்திருப்பவே முயற்சிக்கின்றது. வேறு வேறு விடயங்களில் கவனம் செலுத்தி, முக்கிய கடமையிலிருந்து தப்பித்துக்கொள்ள முயற்சிக்கின்றது. எனவே, இந்த கைதுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இல்லையேல் மக்களுடன் இணைந்து நாங்களும் போராட்டத்தில் ஈடுபட வேண்டிவரும்.

### ரவூப் ஹக்கீம்

நாட்டுக்கு தேவையான பல விடயங்களை உள்ளடக்கி ஜனாதிபதி ஆற்றியிருந்த அக்கிராசன உரையை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். அதிலுள்ள விடயங்களை நிறைவேற்றிக் கொள்ளும் விருப்பம், ஜனாதிபதிக்கு இருக்குமானால், குறைந்த பட்சம் அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளிலிருந்து விடுபடுவதற்கு குறிப்பாக, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தில் அவரையும் குற்றவாளியாக இணைக்கப்பட்டுள்ளதிலிருந்து விடுபடுவதற்காக, உயிர்த்த ஞாயிறு தாக்குல் பின்னணியிலுள்ள மர்மங்களை சரியாக வெளிக்கொணர்வதற்காக, சானி அபேசேகர போன்ற சிறந்தவர்களை மீண்டும் விசாரணைக்காக நியமித்து, இந்த தாக்குதலுக்கு பின்னாலுள்ள சதி என்ன? அதன் சூத்திரதாரிகள் யார் என்பதை கண்டறிவதற்காக ஜனாதிபதி முன்வருவாரா?

வெளிநாடுகளிலிருந்து புலனாய்வு அதிகாரிகளை கொண்டுவர வேண்டியதில்லை. இங்குள்ள பொலிஸ் துறையில் ஒதுக்கப்பட்டுள்ள சிறந்த பொலிஸ் அதிகாரிகளை நியமித்தால், இந்த தாக்குதலுக்கு பின்னாலுள்ள சதியை கண்டறியலாம். ஆனால், தேசபந்து தென்னக்கோன் போன்றவர்களைக் கொண்டு இதனை சாதிக்க முடியாது.

ஜனாதிபதிக்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருக்கின்றோம். இதற்காக, குறைந்தபட்சம் இந்த நாட்டில் இனவாதத்தை தூண்டிவிட்ட, ஒரு மதகுருவைக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரே நாடு ஒரே சட்டம் செயலணியின் ஆணைக்குழுவின் அறிக்கையையாவது குப்பைத் தொட்டியில் போடுவாரா என்பதை ஜனாதிபதி கூற வேண்டும். அப்போதே, புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைக்கின்றேன் என்ற நம்பிக்கையை ஜனாதிபதி மக்கள் மத்தியில் ஏற்படுத்தமுடியும்.

### அநுர பிரியதர்சன யாப்பா

நெருக்கடிகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே நாட்டிலுள்ள மக்களின் பிரதான கருத்தாகவுள்ளது. இந்நிலையில், இங்குள்ள போராட்டங்கள் அனைத்தும் பொருளாதார பாதிப்பால் ஏற்பட்டதாகும். இவ்வாறான சந்தர்ப்பங்களிலேயே நாடு ஜனநாயகமாக இருக்கவேண்டும். தங்களுடைய கருத்துகளை தெரிவிப்பதற்கு அனைவருக்கும் சுதந்திரமுள்ளது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்கின்றோம். ஜனாதிபதியின் அக்கிராசன உரையிலும் இது குறிப்பிடப்பட்டுள்ளது. வன்முறைகளற்ற விதத்தில் ஜனநாயக முறையில் கருத்துகளை தெரிவிக்கும் சுதந்திரம் இருந்தால் நல்ல விடயம்.

எனினும், இவ்வாறு கருத்து வெளியிடும் சுதந்திரம் அரசியலமைப்பிலுள்ள சில சில உறுப்புரைகளினால் மீறப்படுமாயின், அது கவலைக்குரிய விடயமாகும்.

நல்ல விடயங்களுக்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்கத் தயார். எனினும், ஜனநாயகத்தை மீறினால் அதனை நாங்கள் அனுமதிக்கவும் மாட்டோம். அதற்கு கடுமையான எதிர்ப்பையும் தெரிவிப்போம். மக்களின் போராடும் உரிமை உள்ளிட்ட அனைத்து உரிமைகளையும் நாங்கள் பாதுகாக்க வேண்டும். இதற்கு எதிராக அரசாங்கம் செயற்பட்டால் அதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

### இராதாகிருஷ்ணன்

நாட்டில் ஏற்பட்ட போராட்டங்கள் ஊடாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அதிகாரத்துக்கு வந்தார். ஆனால், தற்போது இந்த போராட்டக்காரர்களை ஒடுக்குவதில் அவர் மும்முரமாக செயற்படுகின்றார். ஜனநாயக நாட்டில் போராடும் உரிமையுள்ளது. எனினும், அவசரகாலச் சட்டம் மற்றும் அடக்குமுறை ஊடாக போராடுவோரை கைதுசெய்வதை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

அந்த வகையில், ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கைதுசெய்யப்பட்டதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது, ஜோசப் ஸ்டாலினை கைதுசெய்தால், ஜி.எஸ்.பி. வரிச் சலுகை இல்லாது போய்விடும் என்று கூறினார். ஆனால், தற்போது அவரே ஜோசப் ஸ்டாலினை கைதுசெய்துள்ளார்.

போராட்டக்காரர்களை கைதுசெய்து அவர்களை அடக்குவதன் ஊடாக தான் நினைத்ததை செய்ய நினைத்தால், அது தவறு. எனவே, ஜனாதிபதி ரணில் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் குணத்தை கொண்டிருந்தால், அவருடைய செயற்பாடுகளுக்கு ஆதரவளிப்போம். அவரின் பிழையான செயற்பாடுகள் இருந்தால் அதனை தட்டிக்கேட்கவும் தயங்கமாட்டோம் - என்றார்.

## ஜனாதிபதி ரணிலுக்கு...

கல்முனையைச் சேர்ந்த மூத்த உறுப்பினர் அ.அரசரெத்தினம் ஆவேசமாக கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், த.கலையரசன், தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் உட்பட பல்வேறு பிரமுகர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில்...

ஜனாதிபதி தெரிவு தொடர்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூட்டத்தில் அனைவரும் அதாவது 10 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏகமனதாக டலஸுக்கு வாக்களிப்பது என்று நீங்கள் முடிவு எடுத்ததாக கூறுகிறீர்கள்.

ஆனால், தேர்தலுக்கு பின்னர் ஒருசிலர் ரணிலுக்கு வாக்களித்ததாக தகவல்கள் வந்திருக்கின்றன. உடனடியாக அவர்களை கண்டுபிடிக்க வேண்டும். ஏனெனில், இது தொடர்ந்தால் எதிர்காலத்தில் இரகசியமாக எந்தவிதமான தீர்மானமும் எடுக்க முடியாமல் போய்விடும்.

இந்திய அரசாங்கம் சொல்லி ரணிலுக்கு வாக்களித்தது என்று யாராவது சொன்னால் நீங்கள் டலஸுடன் செய்த ஒப்பந்தம் பிரயோசனமில்லை. அதுமட்டுமல்ல மற்றும் ஒரு கேள்வி.

கட்சி அனைத்தும் சேர்ந்து டலஸுக்கு வாக்களிக்குமாறு நீங்கள் தீர்மானம் எடுத்ததாக கூறினீர்கள். இது கட்சியின் முடிவா? அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களின் முடிவா?

ஏனென்றால் 75 வருட ஜனநாயக அரசியலில் ஈடுபட்ட தமிழரசுக் கட்சி இப்படியான ஒரு தவறான முடிவை எடுத்திருக்கின்றது. அது கட்சியை அவமானத்திற்கு உட்படுத்தி இருக்கிறது என்று தமிழரசுக் கட்சி தலைவர் மாவை சேனாதிராஜா அறிக்கை வெளியிட்டார்.

அப்படியானால் தலைவருக்கு தெரியாமல் இந்த முடிவு எடுக்கப்பட்டதா? தெரியப்படுத்தினால் நன்றாக இருக்கும் என்றார்.

இதற்கு பதிலளித்த சுமந்திரன் கூறியதாவது,

ஜனாதிபதி தெரிவு தொடர்பாக தமிழரசுக் கட்சி மட்டத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டத்திலும் பல்வேறு கூட்டங்களை நடத்தினோம். தமிழரசுக் கட்சி கூட்டங்களுக்கு எல்லாம் தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கு அழைப்பு கொடுத்தோம். ஆனால், எரிபொருள் பிரச்சினை காரணமாக மற்றும் சூம் இணைப்பில் இணைந்து கொண்ட முடியாமை காரணமாகவும் அவரது பங்குபற்றுதல் இல்லாமல் இருந்தது. ஆனால், அனைத்து தீர்மானங்களும் அவருக்கு கூறப்பட்டு வந்தது.

அடுத்தது, எமது நாடாளுமன்ற உறுப்பினர் 10பேரில் ஆறு பேர் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் மீதி நான்கு பேர் பங்காளிக் கட்சி உறுப்பினர்கள். அனைவரும் ஏகமனதாக இணைந்து டளஸுக்கு வாக்களிப்பதாக முடிவு எடுத்தோம். அதன்படியே செயல்பட்டோம். யாராவது மாறி வாக்களித்து இருக்கிறார்கள் என்று நான் கருதவில்லை என்றார்.

## பஸ் கட்டணங்கள்...

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு பஸ் கட்டணம் குறித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய பொதுபோக்குவரத்து ஆணைக்குழுவின் நிபந்தனைகளுக்கு அமைய பஸ் கட்டண திருத்தத்திற்கு போக்குவரத்து அமைச்சரின் அனுமதி கிடைத்துள்ளது. அதற்கமைய, பஸ் கட்டண திருத்தம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய பஸ் கட்டண திருத்தம் பிரதான இரு காரணங்களைக் கொண்டே முன்னெடுக்கப்படுகின்றன. அதன்படி, கொரோனா தொற்று தீவிரத்தால் சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில், பஸ் ஆசனங்களுக்கு அமையவே பயணிகளை ஏற்றிச் செல்ல முடியும் என வலியுறுத்தப்பட்டிருந்தது.

அதற்கமைய, சாதாரண பஸ் சேவையிலும் ஆசனங்களின் எண்ணிக்கைக்கு அமையவே பயணிகளை ஏற்றிச்செல்ல முடியும் என்ற சட்டத்தை கொண்டுவந்தோம். இதனால், 2020 நவம்பர் 11ஆம் திகதி சாதாரண பஸ் கட்டணத்தை 20வீதத்தால் அதிகரித்தோம். ஆனால், தற்போது எரிபொருள் நெருக்கடியால் ஆசனங்களை விட அதிகளவான பயணிகளை ஏற்றிச் செல்கின்றனர். இந்த காரணத்தோடு, மக்களின் கோரிக்கைகளுக்கு அமைய பஸ் கட்டண திருத்தத்திற்கு அனுமதியை பெற்றுக்கொண்டோம்.

அதன்படி, 2020 நவம்பர் 11ஆம் திகதி அதிகரிக்கப்பட்ட 20வீதத்தில் 10வீத பஸ் கட்டண குறைப்பை முன்னெடுப்பதற்கும் கடந்த முதலாம் திகதி டீசல் விலை 10ரூபாவால் குறைந்தமையினால், 1.14 வீத பஸ் கட்டண குறைப்பையும் இணைந்து 11.14 வீத பஸ் கட்டண குறைப்பை முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.

அதன்படி, 38 ரூபாவாகவுள்ள ஆரம்ப கட்டணம் 34 ரூபாவாக குறைக்கப்படும். இந்த கட்டண குறைப்பு 350ஆவது பஸ் கட்டணம் வரை செல்லுபடியாகும். அதன்படி, 350ஆவது பஸ் கட்டணமாகவுள்ள 2 ஆயிரத்து 882 ரூபா தற்போது 2 ஆயிரத்து 611 ரூபாவாக குறைவடையும். இக் கட்டண குறைப்பானது இன்று (நேற்று) நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும். இந்த கட்டண குறைப்பை அனைத்து சாதாரண பஸ் சேவைகளும் முன்னெடுக்க வேண்டும். அவ்வாறு, கட்டண குறைப்பை முன்னெடுக்காத பட்சத்தில் 1955 என்ற இலக்கத்துக்கு அழைப்பு விடுத்து முறைப்பாடு செய்யவும் முடியும் - என்றார்.

# ஜோசப் ஸ்டாலினின் கைதை கண்டித்து யாழ். பாடசாலைகளுக்கு முன் போராட்டம்








## பதாகைகளை ஏந்தி ஆசிரியர்கள் எதிர்ப்புக் கோஷம்

**(யாழ். செய்தியாளர்)**

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலினின் கைதைக் கண்டித்து யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளின் முன்னால் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் ஒன்றுகூடிய அதிபர் மற்றும் ஆசிரியர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது ஜோசப் ஸ்டாலினின் கைதைக் கண்டிக்கும் வாசகங்களைக்கொண்ட பதாகைகளையும் போராட்டத்தில் ஈடுபட்ட அதிபர் மற்றும் ஆசிரியர்கள் தாங்கியிருந்தனர்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் நீதிமன்ற உத்தரவை மீறி போராட்டம் நடத்தியதற்காக நேற்றுமுன் தினம் (3) பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அடக்குமுறையின் முன்னோடி மஹிந்த வெளியே; அமைதிப் போராட்டம் நடத்திய ஸ்டாலின் உள்ளே!

## இதற்கான காரணம் என்னவென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கேள்வி

அமைதியாகவும், நாகரிகமாகவும் போராட்டம் மேற்கொண்ட ஜோசப் ஸ்டாலின் போன்ற தொழிற்சங்கத் தலைவர்களை தண்டனைக்குட்படுத்தி கைதுசெய்வதற்கும், தற்போதைய வன்முறைசார் அடக்குமுறையின் முன்னோடியான மஹிந்த ராஜபக்ஷ இன்னமும் சுதந்திரமாக வெளியே நடமாடுவதற்குமான காரணம் என்ன? என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பினார்.

உழைக்கும் மக்களுக்காகவும், ஆசிரியர் சமூகத்திற்காகவும் போராடிய ஜோசப் ஸ்டாலின் கைதுசெய்யப்பட்டுள்ளபோது, அடக்குமுறையின் தந்தையான மஹிந்த ராஜபக்ஷ ஆரோக்கியமாக பொழுதை கடத்திக் கொண்டிருக்கிறார் எனவும் தெரிவித்தார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ள தொழிற்சங்கத் தலைவர் ஜோசப் ஸ்டாலினை பார்வையிடுவதற்காக நேற்று (04) கொழும்பு கோட்டை பொலிஸ் நிலையத்திற்குச் சென்ற சந்தர்ப்பத்தில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் முகமாக எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



மனிதநேயத்தின் பெயரால் நாடு குறித்து சிந்தித்து ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டிய தருணத்தில், எதேச்சதிகாரமாக அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபடுவதை தான் வன்மையாக கண்டிப்பதாகவும், இந்த அரச பயங்கரவாதத்தை உடனடியாக நிறுத்துமாறும் எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்தார்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாவதற்கு முன்னர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது ஜோசப் ஸ்டாலின் தொடர்பில் கூறியிருந்ததை நினைவுகூர்ந்த எதிர்க்கட்சித் தலைவர், அன்று அவர் கைதுசெய்யப்பட்டபோது ஜீ.எஸ்.பி. வரிச்சலுகையை இழக்க நேரிடும் என்று கூறியிருந்தார். இன்று அது அவ்வாறு இழக்கப்படாதா எனவும் கேள்வி எழுப்பினார்.

வெடிகுண்டுகள், வாள்கள், துப்பாக்கி ரவைகள் போன்ற ஆயுதங்களால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல், கலந்துரையாடல் மற்றும் இணக்கப்பாட்டின் மூலம் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், தற்போது வரை தொடரும் வன்முறைச் சுழற்சியை ஆரம்பித்தது முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே எனவும் தெரிவித்தார்.

எந்தவொரு குடிமகனும் தான் கருதும் கருத்தைக் கொண்டிருப்பதற்கும், அதற்காக முன் நிற்கவும், பேசவும், ஒன்றுகூடவும், அமைதியான முறையில் போராட்டம் நடத்தவும் உரிமையுண்டு என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், வன்முறையற்ற அகிம்சை வழியில் போராடும் உரிமையை யாராலும் மீற முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

ஜோசப் ஸ்டாலின் தனக்குள்ள உரிமைகளை நாட்டுக்காக ஜனநாயக முறையில் பயன்படுத்தினார் எனவும், அந்த உரிமையை எவராலும் எதிர்க்க முடியாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

# நீண்ட நாட்களின் பின்னர் ஜனாதிபதி உரை மிகவும் மத்தியஸ்தமாக இருந்தது

## தயாசிறி ஜயசேகர எம்.பி. தெரிவிப்பு



நீண்ட காலத்தின் பின்னர் மிகவும் மத்தியஸ்தமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவருடைய சிம்மாசன உரையை நிகழ்த்தியிருந்தாலும், அதனை நடைமுறைப் படுத்தும்போதே சவால் ஏற்படுமென நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடுமுழுவதுமுள்ள பிரச்சினைகள் தொடர்பில் இந்த சிம்மாசன உரையில் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. அதேபோன்று, இதுவொரு வெறும் சிம்மாசன உரையாக இருக்காதென நான் நம்புகிறேன். நாட்டிலுள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கு சர்வகட்சி அரசாங்கமொன்றுக்கான யோசனையை சுதந்திரக் கட்சியே முன்வைத்தது.

எதிர்காலத்தில் சர்வகட்சி அரசாங்கமொன்று உருவாகும் என்பதுடன், அதில் பதிவுகளை ஏற்பதா இல்லையா என்பது தொடர்பில் கட்சி என்ற அடிப்படையில் தீர்மானமொன்றை எடுத்து எதிர்காலத்தில் செயற்படுவோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# உயிர்காக்க மருந்து திட்டத்தின் கீழ் மடக்கும்புரை வைத்தியசாலைக்கு உதவி

## அத்தியாவசிய மருந்துகளை வழங்கினார் உதயா எம்.பி.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம் மற்றும் பிரதித் தலைவர் மயில்வாகனம் உதயகுமார் ஆகியோர் இணைந்து ஆரம்பித்துள்ள 'உயிர்காக்க மருந்து' என்னும் திட்டத்தின் கீழ் மற்றும் ஒரு தோட்டப்புற வைத்தியசாலைக்கு அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் வழங்கப்பட்டன.

தலவாக்கலை மடக்கும்பரை தோட்ட வைத்தியசாலைக்கு தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவர் மயில்வாகனம் உதயகுமார் தலைமையில் இந்த அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் வழங்கப்பட்டன.

மடக்கும்பரை தோட்டம் மற்றும் வட்டகொடை தோட்டத்தைச் சேர்ந்த சுமார் 10இற்கும் மேற்பட்ட பிரிவுகளில் வசிக்கும் 2000இற்கும் அதிகமான மக்கள் இதன்மூலம் நன்மை அடைகின்றனர்.

நோர்வுட் - கிளங்கன் வைத்தியசாலைக்கு மருந்துப் பொருட்கள் வழங்கியதுபோன்று தோட்டப்புற வைத்தியசாலைகளுக்கும் மருந்துப் பொருட்கள் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அண்மையில் நுவரெலியா



கந்தப்பளை தோட்ட வைத்தியசாலைக்கு ஒரு தொகை அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் உதயகுமார் தலைமையில் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

'உயிர்காக்க மருந்து' திட்டத்தின்கீழ் தொடர்ந்து தோட்டப்பகுதி வைத்தியசாலைகளுக்கு அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் வழங்கப்படும் என தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவர் மயில்வாகனம் உதயகுமார் தெரிவித்துள்ளார்.

# வட்டுக்கோட்டைக்கு புதிய பொலிஸ் பொறுப்பதிகாரி

**(யாழ். செய்தியாளர்)**

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தின் புதிய பொறுப்பதிகாரியாக டபிள்யு.டி.பி.டி. கொஸ்தா நியமிக்கப்பட்டார்.



ஏற்கனவே கடமையாற்றிய பொறுப்பதிகாரி சமன் குணதிலக்க 07 ஆண்டுகள் பணியாற்றி, கடந்த 30.07.2022 அன்று இடமாற்றம் பெற்றுச் சென்றதையடுத்து பிரதம பொலிஸ் பரிசோதகர் கொஸ்தா இவ்வாறு பதவியேற்றமை குறிப்பிடத்தக்கது.

# கோவிட் தொற்றுப் பரவல், உயிரிழப்பு எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரிப்பு

கோவிட்-19 தொற்றுப் பரவல் மற்றும் கோவிட் மரணங்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கோவிட் பரவல் குறித்து அவதானத்துடன் செயற்படுமாறு சுகாதாரப் பிரிவினர் பொதுமக்களை வலியுறுத்தியுள்ளனர். மேலும் கடந்த வாரத்தில் மாத்திரம் கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் 122 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இதன்மூலம் கோவிட் தொற்றுக்குள்ளானோரின் மொத்த எண்ணிக்கை 6 இலட்சத்து 66 ஆயிரத்து 964 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் நேற்றுமுன்தினம் 08 கோவிட் மரணங்கள் பதிவானதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார். அதில் 30 முதல் 59 வயதுக்கிடைப்பட்ட 4 ஆண்களும் அடங்குகின்றனர். ஏனையவர்கள் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர்.

இதேவேளை, கோவிட் தடுப்பூசியின் மூன்றாவது மற்றும் நான்காவது டோஸை இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்கள் உடனடியாக அவற்றை பெற்றுக்கொள்ளுமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவுறுத்தியுள்ளது.

உரிய முறையில் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாதவர்கள் சுகாதார ரீதியான பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடுமென அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

# தோட்டக் குடியிருப்பு மீது மண்மேடு சரிந்ததில் உறவினர் வீடுகளில் 16 பேர் தஞ்சம்

## பலாங்கொடை, மாரதென்னவில் அதிகாலையில் அனர்த்தம்

## அதிகாரிகள் வருகை தரவில்லையென மக்கள் குற்றச்சாட்டு



**(பலாங்கொடை செய்தியாளர்)**

பலாங்கொடையில் கடந்த சில நாட்களாக பெய்துவரும் அடைமழை காரணமாக மாரதென்ன, முதலாம் பிரிவு தோட்டக் குடியிருப்பு மீது நேற்று முன்தினம் (03) மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது.

மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் நான்கு வீடுகள் முற்றாக சேதமாகியுள்ளதுடன், பாதிக்கப்பட்ட நான்கு குடும்பங்களில் உள்ள சுமார் 16 பேர் வீடுகளிலிருந்து வெளியேறி உறவினர்களின் வீடுகளுக்குச் சென்றுள்ளார்கள்.

பலாங்கொடை மாரதென்ன தோட்டம் முதலாம் பிரிவு தோட்டக் குடியிருப்புப் பகுதிக்கு ஏற்கனவே 2016ஆம் ஆண்டு மண்சரிவு அனர்த்தம் ஏற்பட்டிருந்தபோது இரத்தினபுரி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் அப்பகுதியை பரிசோதனை செய்து அப்பகுதிக்கு அபாய எச்சரிக்கை விடுத்துள்ளார்கள்.

அதன் பின்னர் உரிய அதிகாரிகள் மற்றும் அத்தோட்ட அதிகாரிகள் கலந்து பேசி பாதிக்கப்பட்டவர்களுக்கு அப்பகுதியிலேயே வீடுகளும் அமைத்துக் கொடுத்துள்ளார்கள்.





அவ்வாறு அமைத்துக் கொடுக்கப்பட்ட வீடுகளின் நிர்மாணப் பணிகள் நிறைவேறாத காரணத்தினால் அப்பகுதி மக்கள் அந்த வீடுகளுக்குச் செல்லாமல் மண் சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள வீடுகளிலேயே பல வருடங்களாக தற்போது வரையிலும் வாழ்ந்துகொண்டு வருகின்றார்கள்.

நேற்று முன்தினம் முதல் நேற்று அதிகாலை வரை அப்பகுதியில் பெய்த கடும் மழை காரணத்தினால் அதிகாலை 3.30 மணியளவில் பாரிய மண்மேடு ஒன்று அப்பகுதி லயன் குடியிருப்பு மீது சரிந்து வீழ்ந்துள்ளது.

மண்சரிவு ஏற்பட்டுள்ள அப்பகுதியையும் பாதிக்கப்பட்டவர்களையும் பார்க்க எந்தவோர் அதிகாரியும் வருகை தரவில்லையென மக்கள் தெரிவித்தனர். இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் தங்குமிடம் இல்லாமல் சாப்பிட உணவு இல்லாமல் பெரிதும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளார்கள்.

பலாங்கொடையில் பல பகுதிகளில் தொடர்ந்தும் இடைக்கிடையில் காற்றுடன் கூடிய கடும் மழை பெய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஓகஸ்ட் 05ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# ஜனாதிபதி ரணிலின் கொள்கை விளக்க உரை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போதைய நாடாளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைத்து நேற்று முன்தினம் சபையில் நிகழ்த்திய தனது முதலாவது கொள்கை விளக்க உரையில், இலங்கை வரலாற்றில் முன்னென்றும் இல்லாத வகையிலான நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான பரந்துபட்ட அரசியல் மற்றும் பொருளாதாரத் திட்டங்களை முன்வைத்திருக்கிறார்.

45 வருடகாலமாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்துவரும் அவர் 6 தடவைகள் பிரதமராகவும், அதற்கு முன்னர் முக்கியமான அமைச்சுப் பொறுப்புக்களை வகித்தவராகவும் சபையில் பெருமளவு உரைகளை நிகழ்த்தியிருக்கிறார். ஆனால், நாட்டின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்ற வகையில் ஆற்றிய இந்த கொள்கை விளக்க உரையே இதுவரையான அவரின் அனுபவ முதிர்ச்சியை சிறந்த முறையில் வெளிப்படுத்தியிருக்கக்கூடிய ஒரு நீண்ட உரை என்று நிச்சயமாக வர்ணிக்கமுடியும்.

நம்பிக்கை இழந்த நிலையில் இருந்து நாட்டையும், மக்களையும் மீட்பதற்காக பாரிய சவால்களுக்கு மத்தியில் நாட்டின் தலைமைப்பொறுப்பை ஏற்றிருப்பவர் என்ற முறையில் தன் முன்னால் உள்ள கடமைகளை உணர்ந்தவராக, சகல சமூகங்களையும் அரவணைத்துச் செல்லவேண்டிய பொறுப்பை முழுமையாக புரிந்துகொண்டவராக இந்த உரையை அவர் நிகழ்த்தியிருக்கிறார்.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளும் தற்போதைய இடர்மிகுந்த ஐக்கியப்பட்டு செயற்படவேண்டும் என்று ஜனாதிபதி விக்கிரமசிங்க ஏற்கெனவே அழைப்பு விடுத்த சந்தர்ப்பங்களில் அவருக்கு கிடைத்திராத வரவேற்பும், ஒத்துழைப்பும் இந்த கொள்கை விளக்க உரைக்குப் பிறகு கிடைப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. சகல அரசியல் கட்சிகளின் தலைவர்களும் ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பை வழங்கவேண்டிய அவசியத்தை உணர்ந்தவர்களாக கருத்துகளை வெளியிட்டிருக்கிறார்கள்.

சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை உடனடியாக அமைத்தல், சகல கட்சிகளினதும் தலைவர்களை உள்ளடக்கிய தேசிய சபையை அமைத்தல், குடிமக்களின் முழுமையைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய முறையில் அவர்கள் மத்தியில் உள்ள பல்வேறு தரப்பினரையும் உள்ளடக்கிய மக்கள் சபையை அமைத்தல், ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தி நாடாளுமன்றத்தின் அதிகாரங்களை அதிகரிப்பதற்கு அரசியலமைப்புக்கு திருத்தங்களைக் கொண்டுவருதல் ஆகியவை ஜனாதிபதியின் திட்டங்களில் பிரதானமானவை.

அரசியல் கட்சிகளின் தலைவர்களை உள்ளடக்கிய தேசிய சபையின் முதற்பணி குறைந்தபட்ச பொதுவேலைத்திட்டம் ஒன்றை வகுப்பதாகும். இன, மத வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்ட பகைமை இல்லாத இலங்கை ஐக்கியத்தை கட்டியெழுப்புவதே தேசிய சபையின் இலக்காகும். நாட்டுக்கு பொருத்தமான ஆட்சிமுறை எது, ஆட்சிமுறையில் எத்தகைய சீர்திருத்தங்கள் செய்யப்படவேண்டும், என்பதை ஆராய்ந்து பொருத்தமான ஆட்சிமுறை குறித்து தேசிய கருத்தொருமிப்பை ஏற்படுத்துவதே மக்கள் சபையின் பிரதான பணியாகும். தேசிய சபையும், மக்கள் சபையும் அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கும் பொறுப்பைக் கொண்டவையாக இருக்கும் என்று ஜனாதிபதி விளக்கமளித்திருக்கிறார்.

பொருளாதார வீழ்ச்சிக்கு வழிவகுத்து நாட்டை வங்குரோத்துநிலைக்கு கொண்டுவந்த கடந்தகால கொள்கைகளையும், செயற்பாடுகளையும் விரிவாக எடுத்துரைத்த ஜனாதிபதி விக்கிரமசிங்க அடுத்த 25 வருடகாலத்துக்கான தேசிய பொருளாதார கொள்கையொன்றை வகுக்க முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாகவும், அந்த கொள்கை வறியவர்களும், வசதி குறைந்த பிரிவினரும் பொருளாதார ரீதியில் முன்னேற்றம் அடைவதை உறுதிப்படுத்துவதற்கும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்குமான சமூக சந்தைப் பொருளாதார முறைமைக்கான அடித்தளத்தை அமைக்கும் என்று குறிப்பிட்டார். மக்கள் தற்போது எதிர்நோக்குகின்ற இடர்பாடுகளைத் தணிப்பதற்கான இடைக்கால நிவாரண நடவடிக்கைகளை எடுப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்துவதாக அவர் கூறிய போதிலும், நீண்டகால அடிப்படையில் பயனளிக்கக்கூடிய திட்டங்களிலேயே தனது கவனம் குவிந்திருக்கிறது என்பதை வெளிப்படையாக சொல்ல அவர் தயங்கவில்லை.

இதனிடையே, தமிழர்களின் நீண்டகாலப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணவேண்டிய அவசியத்தையும், மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு பரிகாரம் தேடவேண்டிய பொறுப்பையும் ஜனாதிபதி தனது உரையில் அழுத்திக் கூறியிருக்கிறார்.

இதுகாலவரையான இனவெறி, மதவெறி அரசியலுக்கு முடிவுகட்டவேண்டும் என்ற தனது பெருவிருப்பை எந்தவிதமான சந்தேகமும் இன்றி நாட்டு மக்களுக்கு கூற கொள்கை விளக்கவுரையை ஜனாதிபதி பயன்படுத்தியிருப்பது ஆரோக்கியமான அறிகுறியாகும். மக்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்தும் இனவாத, மதவாத அரசியலை தனது அரசியல் வாழ்க்கையின் தொடக்கத்தில் இருந்தே வெறுத்துவந்ததால், தனக்கு பின்னடைவுகள் ஏற்பட்டபோதிலும் தனது கொள்கையில் இருந்து ஒருபோதும் தளரவில்லை என்று கூறிய ஜனாதிபதி, இனவெறிக்கும், மதவெறிக்கும் எதிராக இன்று இளைஞர்கள் சுலோகங்களை எழுப்புவதை சுட்டிக்காட்டினார்.

சகல இனத்தவர்களும் சமமாக நடத்தப்படவேண்டும் என்று சிங்கள இளைஞர்கள் இன்று வலியுறுத்துவதாகவும் அவர் கூறினார். 'அரகலய' மக்கள் கிளர்ச்சி போராட்டங்களின்போது இனங்களுக்கிடையில் ஐக்கியத்தை பேணுவதில் இளைஞர்களினால் காண்பிக்கப்பட்ட அக்கறையின் விளைவே அவரின் இந்த கூற்று என்பதில் சந்தேகமில்லை.

இவ்வாறாக ஆரோக்கியமான தளத்தில் யோசனைகளையும், திட்டங்களையும் முன்வைக்கும் ஜனாதிபதி விக்கிரமசிங்க, தன்னை நாட்டின் அதியுயர் பதவிக்கு உந்தித்தள்ளிய அசாதாரண சூழ்நிலையை உருவாக்கிய வரலாறு காணாத மக்கள் கிளர்ச்சியை கையாளுகின்ற விடயத்திலும் அதே பண்பை வெளிக்காட்ட வேண்டும்.

அவர் கொள்கை விளக்கவுரையை நிகழ்த்திய சில மணிநேரங்களில் கொழும்பு காலிமுகத்திடலுக்கு சென்ற பொலிஸார் அங்கு தற்காலிக கூடாரங்களில் தங்கியிருக்கும் அமைதிவழி போராட்டக்காரர்களை இன்று மாலை 5 மணிக்கு முன்னதாக வெளியேறிவிட வேண்டுமென்று கேட்டார்கள். முன்னதாக கடந்த மாதம் 21 ஆம் திகதி விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவிப்பிரமாணம் செய்துகொண்ட 24 மணிநேரத்துக்குள் காலிமுகத்திடலை சுற்றிவளைத்த படையினரும், பொலிஸாரும் அமைதி வழி போராட்டக்காரர்களை பலவந்தமாக வெளியேற்றினர். ஜனாதிபதி சம்பந்தப்பட்ட முக்கிய நிகழ்வுகளுக்கு பிறகு இவ்வாறு போராட்டக்காரர்கள் நடத்தப்படுவது மக்களுக்கு எதிர்மறையான ஒரு செய்தியையே கொடுக்கிறது. புதியதொரு அரசியல் கலாசாரத்தை உருவாக்கவேண்டும் என்ற தங்களது அபிலாஷையை விக்கிரமசிங்க மதிப்பதாக இல்லை என்று மக்கள் விசனமடைந்திருக்கிறார்கள். போராட்டங்களில் முன்னரங்கத்தில் நின்ற முக்கியஸ்தர்கள் தொடர்ச்சியாக கைதுசெய்யப்பட்டவண்ணம் இருக்கிறார்கள்.

இவை அத்தனையும் அமைதிவழி போராட்டக்காரர்களை பாதுகாக்கவும், அவர்களின் தேவைகளை நிறைவேற்றவும் விசேட பணியகம் ஒன்று அமைக்கப்படும் என்று ஜனாதிபதி தனது கொள்கை விளக்க உரையில் கூறிய பின்னரும் நடைபெறுகின்றன என்பதை அவருக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

போராட்டக்காரர்களுக்கு எதிரான இந்த அடாவடித்தனமான நடவடிக்கைகள் தேசிய கருத்தொருமிப்பின் அடிப்படையில் இன்றைய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வுகளைக் காண்பதில் ஜனாதிபதி வெளிப்படுத்தியிருக்கும் அக்கறைக்கு எந்த விதத்திலும் உதவப்போவதில்லை. அத்துடன் சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்கும் அவரின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தர முன்வந்திருக்கும் அரசியல் கட்சிகளை அதைரியப்படுத்திவிடவும் கூடும். மக்களின் அபிலாஷைகளை பிரதிபலித்து நின்ற போராடடக்காரர்களும் இன்றைய நெருக்கடிகளுக்கு தீர்வு காணும் முயற்சிகளின் ஒரு பங்குதாரர்கள் என்பதை உணர்ந்தவராக ஜனாதிபதி விக்கிரமசிங்க செயற்படவேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

# மியன்மாரின் அபயக்குரல்!

ஜனநாயகப் போராளிகள் நான்கு பேர் மியன்மார் இராணுவ ஆட்சியாளர்களால் தூக்கிலிடப்பட்டிருப்பது உலகின் மனச்சாட்சியையே உலுக்கியுள்ளது. சர்வதேச அமைப்புகளும், வல்லரசு நாடுகளும் பலவீனப்பட்டிருப்பதுதான் மியன்மார் இராணுவத்தின் ஈவிரக்கமில்லாத செயல்பாடுகளுக்குக் காரணம்.

ஆங் சான் சூகியின் ஜனநாயக தேசிய லீக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் யோசேயா சாவ், இராணுவ ஆட்சியின் கடுமையான விமர்சகர் கோ ஜிம்மி ஆகிய இருவரும் தூக்கிலிடப்பட்டிருக்கும் நால்வரில் இருவர். அவர்களுக்கு சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் அடிப்படையில் மேல் முறையீட்டுக்கோ, வழக்குரைஞர்கள் உதவிக்கோ வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்று ஐ.நாவின் மனித உரிமை ஆணையம் தெரிவித்திருக்கிறது.



கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் மியன்மாரில் இராணுவ ஆட்சி நிறுவப்பட்டது முதல் இதுவரை குறைந்தது 140 பேருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. அவர்களில் தண்டனை நிறைவேற்றப்பட்ட முதல் நால்வர் இவர்கள்தான். வரும் வாரங்களிலும், மாதங்களிலும் இதுபோல மேலும் பல தூக்கு தண்டனைகள் நிறைவேற்றப்படலாம் என்று பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.

இராணுவ ஆட்சி அமுல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, இதுவரை 14,000க்கும் அதிகமான ஜனநாயகப் போராளிகள் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் 11,000க்கும் அதிகமானோர் மியன்மாரின் பல்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கின்றனர்.

ஜனநாயகப் போராளிகளின் தலைவியான ஆங் சான் சூகி மீது பொய்க் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இரகசிய விசாரணை நடத்தப்பட்டு 11 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. அவர் மீதான பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இராணுவ நீதிமன்றங்கள் வழங்க இருக்கும் தீர்ப்புகள், அவரை வாழ்நாள் முழுவதும் சிறைக்குள் அடைத்தாலும் வியப்படையத் தேவையில்லை.

ஆயிரக்கணக்கான வீடுகள் எரிக்கப்பட்டிருக்கின்றன. இலட்சக்கணக்கானோர் வீடுகளை இழந்திருக்கிறார்கள். 2,000க்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அப்படியிருந்தும், மியன்மார் இராணுவ ஆட்சியாளர்களால் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவந்து சட்டம் - ஒழுங்கை நிலைநாட்டவோ, தங்களது அதிகாரத்தை முழுமையாக உறுதிப்படுத்தவோ முடியவில்லை என்பதுதான் நிஜ நிலைமை.

1962இல் மியன்மாரில் கொண்டுவரப்பட்ட இராணுவ ஆட்சி 2010 வரை தொடர்ந்தது. அதன் பிறகு 10 ஆண்டுகள் ஆங் சான் சூகியின் ஜனநாயகத்துக்கான தேசியக் கட்சியுடன் உடன்பாடு ஏற்பட்டு, மியன்மாரில் ஓரளவு ஜனநாயகம் ஏற்பட்டது. ஆங் சான் சூகியின் வழிகாட்டுதலில் நடைபெற்ற ஜனநாயக ஆட்சியில் மியன்மாரில் ஓரளவுக்கு ஸ்திரத்தன்மையும், பொருளாதார வளர்ச்சியும் ஏற்பட்டன.

தங்களால் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை என்பதால்தான், இராணுவத் தளபதிகள் சிறிதளவு ஜனநாயகத்தை அனுமதித்தனர். அதன் விளைவாக, சூகியின் செல்வாக்கு அதிகரித்து வருவதும், நிலைமை தொடர்ந்தால் தங்களது அதிகாரத்துக்கு ஆபத்து ஏற்படும் என்பதும் அவர்களை அச்சுறுத்தின. ஜனநாயக சோதனையை முடிவுக்குக் கொண்டுவந்து, இராணுவத்தின் துப்பாக்கி முனையில் ஆட்சியை நடத்தி, அரசியல் எதிரிகளை அழிப்பது என்பதுதான் தளபதிகளின் தற்போதைய நோக்கம்.

முந்தைய ஜனநாயகத்துக்கான போராட்டங்களின்போது, ஆங் சான் சூகியும், அவரது ஆதரவாளர்களும் வன்முறை தவிர்த்த போராட்டங்களை மட்டுமே முன்னெடுத்தனர். இப்போது போராளிகள் வன்முறையைக் கையாள்வது மட்டுமல்லாமல், பல ஆண்டுகளாக இராணுவத்துடன் மோதிக் கொண்டிருக்கும் பல்வேறு இனக்குழுக்களுடன் இணைந்திருக்கிறார்கள். மியன்மார் இராணுவ ஆட்சியாளர்களை அச்சுறுத்தும் இந்த மாற்றம்தான் அவர்களைத் தூக்கிலிடும் அளவுக்கு சென்றிருக்கிறது.

ஆட்சி, தளபதிகளின் கட்டுப்பாட்டில் இருந்தாலும், பொருளாதாரம் அவர்களது கட்டுப்பாட்டில் இல்லை. நகரங்களில் மக்கள் போராட்டமும், கிராமங்களில் ஆயுதப் போராட்டங்களும் அதிகரித்து வரும் நிலையில், மியன்மாரில் பாதிக்கும் மேற்பட்ட இடங்கள் போராட்டக்காரர்களின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களும், மியன்மாரும் 1,642 கி.மீ. எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன. இந்தோ - பர்மா எல்லை என்றுதான் நூற்றாண்டுகளாக அது குறிப்பிடப்படுகிறது. மணிப்பூருக்கும், மியன்மாருக்கும் இடையில் மக்கள் சர்வ சாதாரணமாக சென்று வருகிறார்கள்.

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் இராணுவம் முழுமையாக தனது கட்டுப்பாட்டில் ஆட்சியைக் கொண்டுவந்ததைத் தொடர்ந்து மிஸோரம், மணிப்பூர் மாநிலங்களில் 50,000க்கும் அதிகமாக மியன்மார் அகதிகள் இந்தியாவுக்கு வந்திருக்கிறார்கள். மிஸோரத்தில் மட்டும் நூற்றுக்கும் அதிகமான அகதிகள் முகாம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. டில்லியில் 6,000க்கும் அதிகமான பர்மா அகதிகள் இருக்கிறார்கள் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

மேலை நாட்டு வல்லரசுகள், உக்ரைன் - ரஷ்ய போரை எதிர்கொள்வதில் கவனம் செலுத்துகின்றனவே தவிர, மியன்மாரில் காணப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து அக்கறை செலுத்துவதில்லை. இந்தியா உள்ளிட்ட அதன் அண்டை நாடுகளும் மியன்மார் இராணுவத் தளபதிகளுக்கு எதிராகப் பேசத் தயங்குகின்றன. நாடுகள் எடுக்கும் முடிவுகள் மியன்மாரை சீனாவின் அரவணைப்புக்குத் தள்ளிவிடுமோ என்கிற பயம்தான் அதற்குக் காரணம்.

*(நன்றி - தினமணி)*

## நக்கல் நமசிவாயம்

***ஈஸ்ரர் தாக்குதல் விசாரணைய பத்தி ரணில் ஐயா பார்லிமென்ட்டில் பேசவில்லை பாருங்கோ..! பேசினா மைத்ரி ஐயாவுடைய ஆதரவு கிடைக்காம போய்விடும் என்று யோசிச்சிருப்பாராக்கும்..!***



## இன்றைய நாளில்...

- 1100 – இங்கிலாந்தின் மன்னராக முதலாம் ஹென்றி வெஸ்ட் மின்ஸ்டர் மடத்தில் முடிசூடினார்.
- 1806 – பிரித்தானிய இலங்கையில் இஸ்லாமியர்களுக்கான திருமணச் சட்ட விதிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.
- 1874 – ஜப்பான் அஞ்சல் சேமிப்புத் திட்டத்தை ஆரம்பித்தது.
- 1884 – விடுதலைச் சிலைக்கான அடிக்கல் நியூயோர்க் துறைமுகத்தில் பெட்லோ தீவில் நாட்டப்பட்டது.
- 1906 – ஈரானில் அரசியல்சட்ட முடியாட்சியைக் கொண்டுவர மன்னர் மொசாபர் அதின் சா இணங்கினார்.
- 1914 – முதலாவது மின்சார சைகை விளக்கு அமெரிக்காவில் கிளீவ்லாந்தில் நிறுவப்பட்டது.
- 1926 – ஹங்கேரிய மாயக்கலை வல்லுநர் ஆரி உடீனி 91 நிமிடங்கள் நீருக்கடியில் மூடிய தாங்கி ஒன்றில் இருந்து சாதனை புரிந்தார்.
- 1949 – ஈக்குவடோரில் நிகழ்ந்த நிலநடுக்கத்தில் 6,000 பேர் உயிரிழந்தனர். 50 நகரங்கள் அழிந்தன.
- 1958 – தமிழ்மொழிக்கான சிறப்புப் பயன்பாட்டுச் சட்டமூலம் இலங்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. முக்கிய எதிர்க்கட்சிகள் வெளிநடப்புச் செய்தன.
- 1960 – புர்க்கினா பாசோ, பிரான்ஸிடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1962 – தென்னாபிரிக்காவின் இனவொதுக்கல்: 17 மாதத் தேடுதலின் பின்னர் நெல்சன் மண்டேலா கைதுசெய்யப்பட்டார். இவர் 1990 வரை விடுவிக்கப்படவில்லை.
- 1962 – அமெரிக்க நடிகை மர்லின் மன்றோ, லொஸ் ஏஞ்சலசில் உள்ள அவரது வீட்டில் மர்மமான முறையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.
- 1963 – பனிப்போர்: அமெரிக்கா, சோவியத் ஒன்றியம், ஐக்கிய இராச்சியம் ஆகியன காற்று மண்டலம், விண்வெளி, மற்றும் நீருக்கடியில் அணுச் சோதனைகளை நிறுத்த உடன்பட்டன.
- 1965 – பாகிஸ்தானியப் படையினர் எல்லைக் கோட்டைத் தாண்டி உள்ளூர் மக்கள் வேடத்தில் இந்தியாவிற்குள் புகுந்தனர். இந்திய-பாகிஸ்தான் போர் ஆரம்பமானது.
- 1971 – முதலாவது பசிபிக் தீவுகளின் மாநாடு நியூசிலாந்து, வெலிங்டன் நகரில் ஆரம்பமானது.
- 1973 – சோவியத் ஒன்றியம் மார்ஸ்-6 விண்கலத்தை ஏவியது.

# கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிலர் எனக்கு ஆதரவாக வாக்களித்தனர்

## பகிரங்கப்படுத்தினார் ஜனாதிபதி ரணில்







தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. சர்வகட்சி அரசாங்கத்தினை அமைக்கும் முயற்சியில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஈடுபட்டுள்ள நிலையிலேயே இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்சினைகள் தொடர்பில் பேசப்பட்டுள்ளது. குறிப்பாக தமிழ் மக்களின் நலன்சார்ந்த 10 முக்கிய விடயங்களை நிறைவேற்றுமாறு கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளனர்.

இதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இணக்கம் வெளியிட்டுள்ளதாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

இதன்போது கருத்து வெளியிட்ட சிறிதரன், ஜனாதிபதி தெரிவின்போது கூட்டமைப்பினர் டலஸ் அலகப்பெருவிற்கு வாக்களித்திருந்தமையினை சுட்டிக்காட்டியிருந்தார்.

எனினும், இதனை பொருட்படுத்தாமல் தங்களது கோரிக்கையினை நிறைவேற்றவுள்ளமையினை வரவேற்பதாகவும் அவர் தெரிவித்தார். இதனை எம்.ஏ. சுமந்திரன் மொழி பெயர்த்திருந்தார்.

இதன்போது பதில் வழங்கிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கூட்டமைப்பின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனக்கு ஆதரவாக வாக்களித்திருந்ததாக குறிப்பிட்டார்.இதன்போது, குறித்த கூட்டத்தில் பங்கேற்றிருந்த கூட்டமைப்பின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மௌனம் காத்திருந்தனர்.

அத்துடன், ஜனாதிபதியின் தேசிய வேலைத்திட்டத்தின் அடிப்படையிலேயே, சர்வகட்சி அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவதா இல்லையா என்பதனை தீர்மானிக்க முடியும் என கூட்டமைப்பினர் ஜனாதிபதியிடம் குறிப்பிட்டிருந்தனர்.

குறித்த சந்திப்பில் பிரதமர் தினேஷ் குணவர்தனவும் பங்கேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. கூட்டமைப்பினர் ஜனாதிபதியிடம் முன்வைத்துள்ள முக்கிய கோரிக்கைகள் வருமாறு,

"நீண்டகாலமாக சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளில் ஒருதொகுதியினரை மூன்று மாத காலத்திற்குள் முதற்கட்டமாக விடுதலை செய்வது.

அம்பாறை மாவட்டம், கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை 1991ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பிரதேச செயலகமாக தரமுயர்த்துவதுடன் கணக்காளர் ஒருவரையும் நியமித்தல்.

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் தனிப்பட்ட காணிகளிலும், பொதுப்பயன்பாட்டுக்குரிய அரச காணிகளிலும் அடாத்தாக முகாமிட்டிருக்கும் இராணுவத்தினருக்கு அக்காணிகளை நிரந்தரமாக வழங்கும் முகமாக, நில அளவைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் அளவீட்டுப் பணிகளை உடனடியாக நிறுத்துதல்.

தொல்பொருள் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், கனியவளத் திணைக்களம் உள்ளிட்டவற்றால், வடக்கு, கிழக்கு தமிழர் நிலங்களில் மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்புகளை உடன் நிறுத்துதல்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக நீக்குதல் மற்றும் அதற்கான நல்லெண்ண சமிக்ஞைகளை முதலில் வெளிப்படுத்தல், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் செயலகத்தால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப் படுத்த உதவுதல்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியை நிலைநிறுத்தவும், உண்மையைக் கண்டறிவதற்கும் உடனடி நடவடிக்கை எடுத்தல்.

வடக்கு, கிழக்கிலுள்ள தனியார் காணிகளிலிருந்து படையினரை வெளியேற்றி, தமது சொந்த நாட்டில் இன்னும் அகதிகளாக உள்ள எமது மக்கள் தமது பூர்வீக நிலங்களில் குடியேற வழிவகை செய்தல்.

கடந்த எண்பது வருடங்களுக்கு மேலாக இந்த நாட்டில் புரையோடிப்போயுள்ள தமிழர்களின் உரிமைக்கான அரசியல் தீர்வுக்காக, காலதாமத மற்ற உடனடிப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்தல்'' உள்ளிட்ட வற்றினையே முன்வைத்திருந்தனர்.

## 04.08.2022 நாணய மாற்று வீதம்

CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 135 6240 | 147 3362 |
| கனேடியன் டொலர் | 165 876 | 178 1 52 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 40 8742 | 44 1060 |
| யூரோ | 250 4475 | 265 18 2 |
| ஜப்பான் யென் | 1 5444 | 1 6572 |
| சிங்கப்பூர் டொலர் | 146 218 | 157 18 7 |
| ஸ்ரேலிங் பவுன் | 320 8666 | 338 662 |
| சுவிஸ் பிரான்ங் | 258 1243 | 275 672 |
| ஐ.அ.டொலர் | 246 1168 | 257 4305 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 846 2126 |
| குவைட் | குவைட் தினார் | 0,065 247 |
| ஓமான் | ஓமான் றியால் | 826 3453 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 345 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 84 88 7 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 1507 |

# கம்பஹா மருத்துவமனையில் கொரோனா கட்டுப்பாட்டுப் பிரிவு மீள ஆரம்பம்

கொரோனா நோய் நிலைமை மீண்டும் அதிகரிக்கும் நிலை காணப்படுவதால் கம்பஹா மாவட்ட பொது மருத்துவமனையிலுள்ள கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்காக, அதிதீவிர சிகிச்சை பிரிவை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த மருத்துவமனையின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சமன் பத்திரண தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொரோனா தொற்று வைரஸ் கட்டுப்பாட்டு தடுப்பூசியை பெற்றுக் கொள்வதற்கு ஒத்துழைக்குமாறும் வைத்திய சாலையின் பணிப்பாளர், மக்களுக்கு அறிவித்துள்ளதுடன் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் கம்பஹா மாவட்ட பொது மருத்துவமனையின் வெளி நோயாளர் பிரிவின் அருகில் தடுப்பூசி வழங்கும் பிரிவில் தடுப்பூசி வழங்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இங்கு 12 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு சிறுவர்களுக்கும் பைசர் தடுப்பூசி நான்காம் கட்டமாக வாரத்தில் ஐந்து நாட்களில் காலை 8மணிமுதல் மாலை 4மணிவரை வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வடக்கில் விசேட பொதுமக்கள் நடமாடும் சேவையை முன்னெடுக்க தீர்மானம்

## இரு கட்டங்களாக நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளதாக மாகாண பிரதிப் பணிப்பாளர் கவிதா தகவல்



நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் நகர விருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாண காரியாலயத்தின் ஏற்பாட்டில் பொதுமக்கள் நடமாடும் சேவை ஒன்று நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடமாகாண பிரதி பணிப்பாளர் திருமதி கவிதா ஜீவகன் தெரிவித்துள்ளார்.

வடபகுதியில் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குரிய தீர்வினை பெற்று கொடுப்பதற்காக பொதுமக்கள் நடமாடும் சேவையானது இரண்டு கட்டங்களாக நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

முதல் கட்டமாக யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கியதாக நடத்த எதிர்வரும் 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடமாகாண காரியாலயத்தில் முதலாம் மாடியில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டமாக வவுனியா மாவட்டம் மற்றும் முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாக வவுனியா கலாசாரம் மண்டபத்தில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இரண்டு பொதுமக்கள் நடமாடும் சேவையும் காலை 8:30 மணி தொடக்கம் பிற்பகல் 2:30 மணி வரை நடைபெறவுள்ளது.

குறித்த நடமாடும் சேவையில் நகர விருத்தி பிரதேசமாக பிரகடனப்படுத்த அதாவது நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நகர அபிவிருத்தி பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பகுதியில் உள்ள தங்களது திட்டமிடல் அனுமதிகள் தொடர்பான பிரச்சினைகள் அதாவது கட்டிட கட்டுமானம், காணி தொடர்பான பிரச்சினைகள் அங்கீகாரமற்ற கட்டிடங்கள் மேலும் வேறு கட்டிட அனுமதிகள் தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வுகள் நடமாடும் சேவையில் பெற்றுக் கொடுக்கப்படும்.

இதில் அபிவிருத்தி திட்டமிடல் அனுமதி தொடர்பாக துறைசார்ந்த திணைக்களங்களின் தலைவர்களின் பங்குபற்றுதலோடு இந்த பொதுமக்கள் நடமாடும் சேவையானது நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, நடமாடும் சேவையில் பயன்பெற விரும்பும் பொதுமக்கள் குறித்த நடமாடும் சேவையில் பங்குபற்ற முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

# அனர்த்த நிவாரண நடவடிக்கைகளுக்காக விமானப்படைக் குழுக்கள் தயார் நிலையில்







சீரற்ற காலநிலையினால் பல் வேறு மாவட்டங்களில் வெள்ளப் பெருக்கு மற்றும் மண்சரிவு ஆபத்து ஏற்படக்கூடுமென அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத் தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, நாட்டில் ஏற்படக்கூடிய அனர்த்தங்களுக்கு நிவாரணம் வழங்குதல் மற்றும் ஆபத்திலிருந்து விடுவிக்கப்படுவதற்காக விமானப்படை தளபதி எயார் மார்சல் சுதர்ஷன பத்திரணவால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

எதிர்கால பேரிடர் சூழ்நிலைகளை தொடர்ந்து கண்காணிக்க விமானப்படை கண்காணிப்பு விமானம், அவசரநிலை ஏற்பட்டால் மக்களுக்கு நிவாரணம் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள விமானப்படை ஹெலிகொப்டர்கள், சிறப்பு பயிற்சி பெற்ற விமானப்படை, ரெஜிமென்ட் சிறப்பு படைகள், மீட்புக்காக பணியாளர்கள், இரத்மலானை, கட்டுநாயக்க, ஹிங்குராங்கொட ஆகிய விமானப்படை முகாம்களில் தயார்படுத்தப்பட்டுள்ளனர்.



# யாழ். பல்கலையில் மூன்றாவது சர்வதேச தமிழியல் ஆய்வு மாநாடு



(யாழ். நிருபர்)

யாழ். பல்கலைக்கழகத்தில் தமிழியல் மற்றும் தமிழிசை வளர்ச்சிக்கென சிங்கப்பூர் எஸ்றேற்றர் கந்தையா கார்த்திகேசு நிதியத்தின் அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறையால் நடத்தப்பட்ட மூன்றாவது சர்வதேச தமிழியல் ஆய்வு மாநாடு நேற்று முன்தினம் (03) யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எம். இரகுநாதன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில், தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவரும், பல்கலைக் கழகப் பேரவை உறுப்பினருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் ஆசியுரையையும், கலைப் பீடாதிபதி பேராசிரியர் கே.சுதாகர் மற்றும் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா ஆகியோர் சிறப்புரைகளையும் நிகழ்த்தினர்.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத் தமிழ்த்துறையின் முன்னாள் தலைவர் கலாநிதி சி.சிவலிங்கராஜா திறப்புரையாற்றி ஆய்வரங்கை திறந்துவைத்தார்.

"ஈழத்துத் தமிழியல் மரபும் மாற்றமும்" என்ற கருப்பொருளில் இடம்பெற்ற இந்த ஆய்வு மாநாட்டில், முன்னாள் துணைவேந்தர்களான பேராசிரியர் என். சண்முகலிங்கன், வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை, முன்னாள் துணைவேந்தரும், வவுனியா பல்கலைக்கழக வேந்தருமான பேராசிரியர் சு.மோகனதாஸ், பீடாதிபதிகள், பேராசிரியர்கள், துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள், மாணவர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

தமிழியலுக்குத் தொண்டாற்றிய மூத்த தமிழ்ப் புலமையாளர்களான திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியம், செல்வி யோகலட்சுமி சோமசுந்தரம், திருமதி புனிதவதியார் சிவக்கொழுந்து, திருமதி மங்கையற்கரசி நடராசா ஆகியோர் அவர்களின் அரும்பணியைப் பாராட்டி கௌரவிக்கப் பட்டனர்.

## மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவிலின் திருப்பணிச் சபை அங்குரார்ப்பணம்



(யாழ். நிருபர்)



மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவிலின் திருப்பணிச் சபையின் அங்குரார்ப்பண நிகழ்வு ஆலயக் கொடியேற்றத் திருவிழாவின் நிறைவில் கடந்த செவ்வாய்க்கிழமை (02) இடம்பெற்றது.

திருப்பணிச் சபை உறுப்பினரும் பாடசாலை அதிபருமாகிய தி.அபராஜிதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஆலய முகாமையாளர் சி.இராமலிங்கம் முன்னிலை வகித்தார். ஆலய மகோற்சவ குரு சிவஸ்ரீ சி. கிருபாகரக் குருக்கள் ஆசியுரை வழங்கினார். செந்தமிழ்ச்சொல்லருவி ச. லலீசன் - ஆலயத்தின் தொன்மை மற்றும் பெருமைகள் குறித்துச் சிறப்புரை ஆற்றினார். சாவகச்சேரி இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் அ.கயிலாயபிள்ளை நிறைவுரையாற்றினார்.

ஆலயத்தின் உள்வீதிக் கொட்டகை மற்றும் நிலம் என்பவற்றைப் புனரமைக்கும் திருப்பணி வேலைகள் இடம்பெறவுள்ளன. இதற்கு முதற்கட்டமாக ஆலய அடியவர்கள் ஆலய முகாமையாளரிடம் சம்பிரதாயபூர்வமாகத் தமது திருப்பணிசார் பங்களிப்புகளை வழங்கினர்.

ஆலய பக்தர்களாக உள்ள இளைஞர்களை உள்ளடக்கி திருப்பணிச் சபை அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மழை காலத்தில் வல்லை பாலத்தில் தொடரும் விபத்துகள்



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் வல்லை பாலத்தில் இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் - கார் விபத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வல்லை பாலத்தில் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற குறித்த விபத்தில் மோட்டார்சைக்கிளில் பயணித்த நபரே காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழில் பெய்துவரும் மழை காரணமாக குறித்த பாலத்தில் வழுக்கும் தன்மை காணப்பட்டமையால் பாலத்தில் பயணித்த கார் வேகக் கட்டுப்பாட்டை இழந்து எதிரே மோட்டார்சைக்கிளில் பயணித்தவர் மீது மோதியதாக விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, விபத்தை ஏற்படுத்திய கார் பாலத்திலிருந்து விழுந்தபோதிலும் சாரதி காயங்களின்றி தப்பியுள்ளார்.

யாழில் வல்லை மற்றும் கோப்பாய் பாலங்கள் இரும்பில் அமைக்கப்பட்டுள்ளமையால் மழை காலங்களில் குறித்த இரு பாலங்களிலும் அதிகளவான விபத்துச் சம்பவங்கள் ஏற்பட்டு வருகின்றன. எனவே, குறித்த இரு பாலங்களிலும் இடம்பெறும் விபத்துச் சம்பவங்களை தடுப்பதற்கு ஏதுவான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட தரப்பினர் எடுக்கவேண்டும் என பலரும் கோரியுள்ளனர்.

வடக்கு செய்திகள்

thamilannorth@gmail.com

## யாழில் அரிசியை அதிக விலைக்கு விற்ற - சிலிண்டரை பதுக்கிய மூவருக்கு தலா ஒரு இலட்சம் ரூபா தண்டம்

(யாழ். நிருபர்)

யாழில் அரிசியின் நிர்ணய விலையை விட அதிக விலைக்கு அரிசி விற்பனைசெய்த இரு வர்த்தகர்கள் மற்றும் சமையல் எரிவாயு சிலிண்டரை பதுக்கிவைத்திருந்த வர்த்தகர் ஒருவரும் நீதிமன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையை அடுத்து, மூவருக்கும் தலா ஒரு இலட்சம் ரூபா தண்டம் அறவிடப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட பாவனையாளர் அதிகாரசபையினருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய, வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனைகளை நடத்தி, அரிசி நிர்ணய விலையை விட அதிக விலைக்கு விற்பனை செய்த இரு வர்த்தகர்கள் மற்றும் எரிவாயு சிலிண்டரை பாவனையாளருக்கு வழங்காது பதுக்கி வைத்திருந்த வர்த்தகர் ஒருவர் என மூவருக்கு எதிராக தனித்தனியாக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

குறித்த வழக்கு விசாரணைகளின்போது வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டமையை அடுத்து, மூவருக்கும் நீதிமன்று தலா ஒரு இலட்சம் ரூபா தண்டம் அறவிட்டுள்ளது.

## நடைமுறை பிரச்சினைக்கு சர்வகட்சி அரசு தீர்வு பெற்றுத்தருமாயின் ஆதரவளிப்போம்

### கண்டி மாவட்ட எம்.பி. வேலுகுமார்

(கண்டி நிருபர்)



தற்போது நாட்டில் காணப்படும் நடைமுறைப் பிரச்சினைகளுக்கு தீர்வு ஒன்றை சர்வகட்சி அரசு பெற்றுத் தருமாயின், அதற்கு ஆதரவளிப்பதில் பிரச்சினை இல்லை என கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

அவர் கண்டியில் வைத்து நேற்று(04) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது நாட்டில் பாரிய பிரச்சினையாக எரிபொருள் வரிசை, எரிவாயு வரிசை போன்றவை காணப்படுவதுடன் விலைவாசி அதிகரிப்பு மற்றும் பணவீக்கம் என்பனவும் காணப்படுகிறது. இதற்கான தீர்வையே பொது மக்கள் எதிர்பார்த்துள்ளனர். அத்தியாவசியப் பொருட்கள் போதியளவு கிடைக்குமாயின் பொது மக்கள் மட்டுமல்ல, சர்வதேசம்கூட இதனையே எதிர்பார்த்துள்ளது. உலக வங்கி, சர்வதேச நாணயநிதியம் போன்றவையும் இதனையே எதிர்பார்க்கின்றன.

எனவே, உடனடித் தேவையான மேற்படி விடயங்கள் தீர்க்கப்படுமாயின், அதற்கு நாம் ஆதரவளிப்பதில் அல்லது அத்தகைய சர்வகட்சி அரசிற்கு ஆதரவை தெரிவிப்பதில் பிரச்சினையில்லை. அதாவது, சர்வகட்சி அரசு ஒன்று அமைப்பது பற்றியும் அதன் பொருளாதார வேலைத்திட்டம் பற்றியும் சரியாக அறிவிப்பதுடன் அது நடைமுறைப்படுத்தப்படுமாயின் எமது ஆதரவு பற்றி சிந்திக்க முடியும் என்றார்.

## நுவரெலியா A7 பிரதான வீதியில் மண்சரிவு: போக்குவரத்து பாதிப்பு

(க.கிஷாந்தன், செ.திவாகரன், பி.கேதீஷ்)



நுவரெலியா A7 பிரதான வீதியில் நேற்றுக்(04) காலை நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நானுஓயா நகரத்திற்கு அண்மித்த பகுதியில் பாரிய மண்சரிவு ஒன்று திடீரென ஏற்பட்டதால் நுவரெலியா – தலவாக்கலை, நுவரெலியா – ஹட்டன், நுவரெலியா – டயகம போன்ற பிரதேசங்களுக்குச் செல்லும் போக்குவரத்துகள் முற்றாக தடைப்பட்டிருந்தன.

இதனால் சுமார் இரண்டு மணித்தியாலங்கள் அவ்வீதியினூடான போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதமாகியிருந்தது. இதனையடுத்து, நுவரெலியா வீதி அதிகார சபை ஊழியர்கள், இராணுவத்தினர், பொலிஸார் ஆகியோர் இணைந்து மண் மேட்டை அப்புறப்படுத்தியுள்ளனர்.

இதனால் அப்பகுதியில் ஒரு வழி போக்குவரத்து சேவை முன்னெடுக்கப்பட்டது. அத்தோடு, இவ்வீதிகளில் பல இடங்களில் ஆங்காங்கே மண்மேடுகள் சரிந்து விழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வீதிகளின் ஊடாக வாகனங்களை செலுத்தும் சாரதிகள் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸார் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

## நுவரெலியா இலங்கை வங்கியின் 83ஆவது ஆண்டு கொண்டாட்டம்



(தலவாக்கலை நிருபர்)

இலங்கை வங்கி தனது 83ஆவது ஆண்டு விழாவினை முன்னிட்டு நுவரெலியா கிளையின் முகாமையாளர் எம்.ராமன் தலைமையில் விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன. இதன்போது சர்வமத பிரார்த்தனைகள் நடைபெற்று கேக் வெட்டி கொண்டாடப்பட்டதுடன் விவசாய மற்றும் வீடமைப்பு கடன் உதவிகள் பயனாளிகள் சிலருக்கு வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், நுவரெலியா இலங்கை வங்கி கிளையின் முகாமையாளர் எம்.ராமன், நுவரெலியா பிரதேச செயலாளர் விதுர சம்பத், நுவரெலியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உடுகம சூரிய, நுவரெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரேமலால் மற்றும் நுவரெலியா இலங்கை வங்கி கிளையின் உத்தியோகத்தர்கள் உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

மலையக செய்திகள்

thamilanmalayagam@gmail.com

## நீர்த்தேக்க கரையோரவாழ் மக்களை அவதானமாக இருக்கக் கோரிக்கை

(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)

மலையகத்தில் தொடர்ந்து பெய்துவரும் அடை மழையினால் நீரேந்தும் பகுதிகளில் நீர்மட்டம் வெகுவாக உயர்வடைந்து வருகிறது.

நோட்டன் விமலசுரேந்திர மின் நிலையத்திற்கு நீர்வழங்கும் காசல்ரீ நீர்த்தேக்கத்தோடு இணையும் கெசல்கமுவ ஓயா, ஹட்டன் ஓயா ஆறு பெருக்கெடுத்துள்ளமையினால் காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் வெகுவாக உயர்வடைந்து வான்கதவுகளுக்கு மேல் நிரம்பி வழியும் தருவாயில் உள்ளது.

எனவே, காசல்ரீ நீர்த்தேக்க கரையோர வாழ் மக்களையும் காசல்ரீ நோட்டன் ஓயா கரையோரத்திலுள்ளவர்களையும் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு மின்சாரசபையினர் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## ஹட்டன் நகரில் இடிந்துவிழும் நிலையிலுள்ள கட்டிடங்களிலிருந்து வெளியேறுமாறு அறிவுறுத்தல்



(க.கிஷாந்தன்)

ஹட்டன் நகரின் டிக்கோயா வீதியில் அமைந்துள்ள எம்.ஆர். நகரப் பகுதியில் இடிந்து விழும் கட்டிடங்கள் மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளை நுவரெலியா மாவட்ட கட்டிட ஆய்வு நிறுவன புவியியலாளர்கள் ஆய்வு செய்தனர். அதனையடுத்து, சில கட்டடங்களைச் சோதனையிட்டபோது, அவற்றில் சில இடிந்து விழும் அபாயத்தில் இருப்பதை அவதானித்ததாக புவியியலாளர் புத்திக விஜேகோன் தெரிவித்தார்.

குறித்த பகுதியில் அமைந்துள்ள மிகவும் ஆபத்தான நான்கு மாடி கட்டிடத்தில் வெடிப்புகள் காணப்பட்டதாகவும் இதனால் அங்கிருந்தவர்களை வெளியேறுமாறு தெரிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போதுள்ள நிலைவரப்படி, கட்டிடம் உடனடியாக இடிந்து விழாது என்பது ஆய்வு மூலம் உறுதி செய்யப்பட்டதாகவும், கட்டடம் கட்ட பெறப்பட்ட அனுமதி மற்றும் திட்டம் மற்றும் முறை கோப்புகளை சரிபார்த்து, இறுதி முடிவு எடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.


மேலும், வாகனங்கள் செல்ல முடியாமல் இருந்த அப்பகுதியில் உள்ள காமினிபுர நுழைவு வீதியை திறப்பதன் மூலம் இலகு ரக வாகனங்களுக்கு மட்டும் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



கொழும்பு -14, கிரேண்ட்பாஸ் வடக்கு நவகம்புர அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் கோவிலில் ஆடிப்பூர விழா பால்குடபவனி, பறவக்காவடி அண்மையில் இடம்பெற்றது.

# அக்கரையில் உணவுக்காக காத்திருக்கும் மக்கள்: எட்டியாந்தோட்டையில் பாலம் உடைந்ததால் அவலம்

## சிரமத்துக்கு மத்தியில் இராணுவத்தினரின் உதவியுடன் உலருணவுகள் வழங்கிவைப்பு





(அருண் யுகேஷ்)

எட்டியாந்தோட்டையில் தொடர்ச்சியாக பெய்த அடைமழை காரணமாக, வீஓயா ஆற்றின் பாலம் வெள்ளம் காரணமாக உடைந்ததால் அக்கரையில் உள்ள பெரன்னாவ மக்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கேகாலை மாவட்டம் எட்டியாந்தோட்டை பிரதேச செயலகத்துக்குட்பட்ட சீபோத் பெரன்னாவ கிராமத்துக்கு செல்லும் வீதியில் வீஓயா ஆற்றைக் கடப்பதற்கு இருந்த ஒரே பாலம் கடந்த ஒரு வருடத்திற்கு முன்பாக வெள்ளத்தால் அடித்துச்



செல்லப்பட்டது. அதன்பிறகு, கிராமத்து மக்களால் தயார் செய்யப்பட்டிருந்த தற்காலிக பாலத்தில் மக்கள் அன்றாடத் தேவைகளுக்காக ஆற்றைக் கடந்து செல்ல வேண்டிய சூழ்நிலையில் வாழ்ந்து வந்தனர்.

ஆனால், தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் கடும் மழை காரணமாக கடந்த ஐந்து நாட்களுக்கு முன்பாக பாரிய வெள்ளத்தால் தற்காலிக பாலம் அடித்துச் செல்லப்பட்டது. அதன் பிறகு ஆறு நாட்களாக அந்த கிராமத்து மக்கள் கிராமத்தை விட்டு வெளியே வருவதற்கு முடியாமல் பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்கு செல்ல முடியாத நிலையில், மிக துன்பத்தை அனுபவித்து வருகின்றனர். மேலும், கடைகளுக்கு சென்று சில உணவுப் பொருட்களை வாங்கக்கூட முடியாத சூழ்நிலை காணப்பட்டது.

இந்நிலையில், நேற்றைய தினம் எட்டியாந்தோட்டை பிரதேச செயலாளரால் அந்த கிராமத்து மக்களுக்கு உலருணவுப் பொருட்கள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த உணவுப் பொருட்களை அவர்களுக்கு வழங்க முடியாத நிலையில், கேகாலை பெரகல இராணுவ முகாமிலிருந்து இராணுவ அதிகாரிகள் மற்றும் எட்டியாந்தோட்டை பொலிஸ் அதிகாரிகள் மிக சிரமத்தின் மத்தியில் பிரதேச இளைஞர்களுடன் இணைந்து உலருணவுப் பொருட்களை வழங்கி வைத்தனர்.

பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் அந்த உலருணவுப் பொருட்கள் ஆற்றை கடந்து மக்களுக்கு கையளிக்கப்பட்டன. இந்த கிராமத்து மக்கள் தமக்கு உடனடியாக இந்தப் பாலத்தை சீரமைத்து தருமாறு அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# புளுமெண்டல் ஸ்ரீமகா காளியம்மன் ஆலயத்தின் இரதோற்சவம் நாளை

கொழும்பு-13 புளுமெண்டல் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீமகா காளியம்மன் தேவஸ்தான 29ஆவது வருட ஆடிப்பூர அலங்கார உற்சவ இரதோற்சவ பெருவிழா நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

ஆலயத்தில் கடந்த ஜூலை 25ஆம் திகதி அகில இலங்கை சமதான நீதவானும் ஆலய தலைவருமாகிய கா.சிவன் மீனாம்பாள், உபதலைவர் சி.ரவிச்சந்திரன், செயலாளர் சி.மணாளன், பொருளாளர் சி.சிவனேஸ்வரன் ஆகியோர் தலைமையில் கொடியேற்றத்துடன் நிகழ்வு ஆரம்பமானது.

அதனைத் தொடர்ந்து ஆறு நாட்கள் ஸ்நபனாபிஷேகம் சுவாமி உள்வீதி வலம் வருதல் இடம்பெற்று ஓகஸ்ட் மாதம் 01ஆம் திகதி திங்கட்கிழமை காலை முகத்துவாரம் சொர்ணாம்பிகை சமேத ஸ்ரீமத் அருணாசலேஸ்வரர் ஆலயத்திலிருந்து புளுமெண்டல் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீமகா காளியம்மன் தேவஸ்தானம் நோக்கி பாற்குடபவனி வலம்வருகை இடம்பெற்றது.

மேலும், இன்றைய தினம் வரலக்ஷ்மி விரத காப்பு பெருவிழா நடைபெறும். காப்பு எடுப்போர் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நாளைய தினம் சனிக்கிழமை பிற்பகல் 12.45 மணிக்கு இரதோற்சவ பெருவிழா நடைபெறும். அத்துடன், நாளை மறுதினம் ஞாயிறு காலை தீர்த்தோற்சவம், மதியம் அன்னதானம் இடம்பெறும். அன்று மாலை கொடியிறக்கத்துடன் நிகழ்வு இனிதே நிறைவு பெறும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

# நாத்தாண்டிய வர்த்தக நிலையங்களில் சுகாதார அதிகாரிகள் திடீர் சோதனை



(ஜூட் சமந்த)

நாத்தாண்டிய நகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் பொதுச் சுகாதார அதிகாரிகள் திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

பாதுகாப்பற்ற வகையில் உணவு தயாரித்தல், காலாவதியான பொருட்களை விற்பனைக்காக வைத்திருத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து அதிகாரிகள் சோதனையிட்டனர்.

இதன்போது நுகர்வோர் பாதுகாப்புக்கு எதிரான வகையில் உணவகங்கள், வர்த்தக நிலையங்களை நடத்திய ஐவர் அடையாளங்காணப்பட்டதுடன் அவர்களுக்கு எதிராக வழக்கு தொடரவுள்ளதாக பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

# முற்போக்கு கூட்டணி ஜனாதிபதியை 11ஆம் திகதி சந்திக்க ஏற்பாடு

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தூதுக்குழு, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை எதிர்வரும் 11ஆம் திகதி நேரடியாக சந்தித்து மலையக தமிழ் இலங்கையர்களின் அபிலாஷைகள் தொடர்பில் குறிப்பாகவும், தென்னிலங்கையில் வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் பொதுவாகவும் கலந்துரையாடும் என கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

"பொருளாதார மற்றும் சமூக ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கான தேசிய சர்வகட்சி வேலைத்திட்டம் ஒன்றினை செயல்படுத்துதல்" தொடர்பில், ஜனாதிபதி தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு விடுத்துள்ள அழைப்பின் பேரிலேயே இந்த சந்திப்பு இடம்பெறும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இன்று ஐக்கிய மக்கள் கூட்டணியின் தூதுக்குழுவிலும் இடம்பெற்று பொதுவான தேசியப் பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடுவோம் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

# வீதியில் கிடந்த நகைப் பையை உரியவருக்கு கையளித்த பொலிஸார்

## மதுரங்குளியில் நன்மதிப்பு மிக்க செயல்



(ஜூட் சமந்த)

வீதியில் விழுந்து கிடந்த தங்க நகைகள் அடங்கிய பையை மதுரங்குளி பொலிஸார் உரிமையாளருக்கு கையளித்துள்ள சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

புத்தளம் - கொழும்பு பிரதான வீதியில் பணியில் ஈடுபட்டிருந்த போக்குவரத்துப் பிரிவு பொலிஸ் உத்தியோகத்தரான டீ.எம்.எம். ருவன், கடந்த 31ஆம் திகதி இந்தப் பையை கண்டெடுத்துள்ளார். அதன் பின்னர் அதனை மதுரங்குளி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் கையளித்துள்ளார்.

அந்தப் பையில் இருந்த அடையாள அட்டையைக் கொண்டு உரியவருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. அதன்பிரகாரம் அவருக்கு அந்தப் பை கையளிக்கப்பட்டுள்ளது. அதில் உள்ள தங்க நகைகளின் பெறுமதி ஆறரை இலட்சம் ரூபாவென உரிமையாளர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

## ஏற்றுமதி வருவாய்க்கான மத்திய வங்கியின் விதிமுறைகளுக்கு முழுமையாக உடன்படுகிறோம்

### கூட்டு ஆடை சங்கங்களின் மன்றம் தெரிவிப்பு

JOINT APPAREL ASSOCIATION FORUM

SRI LANKA APPAREL

அந்நிய செலாவணி பரிவர்த்தனைகள் மற்றும் வெளியேற்றங்களைக் கண்காணிப்பதில் இலங்கை மத்திய வங்கி எடுத்த நடவடிக்கைகளை வரவேற்பதாக இலங்கையின் ஆடை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி தொழில்துறையின் உச்ச அமைப்பான கூட்டு ஆடை சங்கங்களின் மன்றம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த மன்றத்தின் ஊடக அறிக்கையில், "நமது நாடு தற்போது எதிர்கொள்ளும் மோசமான நெருக்கடியை எங்கள் உறுப்பினர்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள். எங்கள் உறுப்பு நிறுவனங்கள் சட்டத்திற்கு இணங்கி, ஏற்றுமதி வருமானத்தை திரும்பவும் நாட்டிற்குள் கொண்டுவருவதை உறுதி செய்வதில் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். இதன் மூலம் மக்கள் எதிர்நோக்கும் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கு நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்படவுள்ளோம்.

"எங்கள் உறுப்பு நிறுவனங்கள் தற்போதுள்ள விதிமுறைகளுக்கு அமைய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதுடன் இந்த சவாலான சூழ்நிலையின் கீழ் தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்த பங்களிக்கும் அனைத்து தரப்பினருக்கும் தேவையான ஒத்துழைப்புகள் வழங்குவதற்காக இலங்கை மத்திய வங்கியும் அரசாங்கமும் முன்னெடுத்துவரும் அனைத்து முயற்சிகளுக்கும் தொடர்ச்சியான ஆதரவை வழங்க நடவடிக்கை எடுப்போம்" என்று வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் மிக அதிகமான அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் துறையான ஆடைத்தொழிற்துறை, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6% பங்களிப்பை வழங்குகிறது. இத்துறையானது சுமார் 350,000 தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்புகளை உருவாக்கி மேலும் 700,000 பேரின் வாழ்வாதாரத்திற்கு உருதுணையாக இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கூட்டு ஆடைச் சங்கங்களின் மன்றம் தொடர்பில் கூட்டு ஆடைச் சங்கங்களின் மன்றம் என்பது இலங்கையின் ஆடைகளை உலகின் முதல் தர ஆடை விநியோக இடமாக மாற்றும் இறுதி இலக்கை நோக்கி உந்தப்பட்ட ஒரு முன்னணி அமைப்பாகும்.

இலங்கையின் ஆடை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி தொழில்துறையின் உச்ச அமைப்பான கூட்டு ஆடை சங்கங்களின் மன்றமானது விநியோக சங்கிலி பங்குதாரர்கள், ஏற்றுமதி சார்ந்த ஆடை உற்பத்தியாளர்கள், கொள்வனவு நிலையங்கள் மற்றும் இலங்கையில் உள்ள சர்வதேச வர்த்தகநாமங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய 5 சங்கங்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது.

# தங்கச் சங்கிலியை திருடிவிட்டு காரில் தப்பிச்சென்ற இருவர் கைது





(ஜூட் சமந்த)

ஆனமடுவ நகரில் முன்னெடுக்கப்பட்டுவரும் தங்க ஆபரண விற்பனை நிலையமொன்றில், தங்க ஆபரணமொன்றை திருடிவிட்டு காரில் தப்பித்துச்சென்று கொண்டிருந்த இருவர் புத்தளம் பொலிஸ் போக்குவரத்து பிரிவு அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் (03) இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கட்டானை பிரதேச சபையின் சாரதி மற்றும் படேபொல,துனகஹா பிரதேசத்தைச் சேர்ந்தநபரொருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரும் முதலில் ஆனமடுவ நகரிலுள்ள தங்க ஆபரண விற்பனை நிலையத்துக்கு சென்று, தனது மகளுக்கு எனக் கூறி தங்கச் சங்கிலி தொடர்பில் விசாரித்துள்ளனர். அதன் பின்னர், ஒரு இலட்சத்து 85ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியொன்றை தேர்ந்தெடுத்துள்ளனர்.

அந்த சங்கிலியின் பெறுமதியில் 60ஆயிரம் ரூபா பணமும் மோதிரம் ஒன்றும் தருவதாகவும் மிகுதித்தொகை பணத்தை பின்னர் தருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

அதனை தொடர்ந்து குறித்த தங்க ஆபரண விற்பனை நிலையத்தில் சேவையாற்றும் பணியாளர் ஒருவருக்கு அவர்கள் மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அதற்கமைய, இது தொடர்பில் தங்க ஆபரண விற்பனை நிலையத்தின் உரிமையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

உரிமையாளரிடம், அங்கிருந்து பணியாளர் தொலைபேசி உரையாடலில் ஈடுபட்டிருந்த சந்தர்ப்பத்தில் தங்க மோதிரம் மற்றும் 30ஆயிரம் ரூபா பணம் என்பவற்றை வைத்து விட்டு தங்கச் சங்கிலியினை திருடிக்கொண்டு சந்தேகநபர்கள் இருவரும் தப்பித்துச் சென்றுள்ளனர். தங்க ஆபரண விற்பனை நிலைய பணியாளரினால் இதுதொடர்பில் ஆனமடுவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் இருவரும் புத்தளத்தை நோக்கி தப்பிச் சென்று கொண்டிருப்பதை உறுதிப்படுத்திக்கொண்ட ஆனமடுவ பொலிஸ் அதிகாரிகள், இதுதொடர்பில் புத்தளம் பொலிஸ் நிலைய போக்குவரத்து அதிகாரிகளுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுத்தனர்.

கிடைத்த தகவலுக்கமைய உடனடியாக செயற்பட்ட பொலிஸ் போக்குவரத்து பிரிவு அதிகாரிகள் தப்பித்துச் சென்றுகொண்டிருந்த காரை நிறுத்துமாறு உத்தரவிட்டுள்ளனர். பொலிஸாரின் தடையையும் மீறி இருவரும் தப்பிச் சென்றுள்ளனர்.

அதனை தொடர்ந்து, குறித்த காரை புத்தளம் பொலிஸ் போக்குவரத்து பிரிவு அதிகாரிகள் பின்தொடர்ந்து சென்று புத்தளம் - கொழும்பு வீதியின் தில்லையடி பிரதேசத்தில் வைத்து கைதுசெய்துள்ளனர்.

இந்த திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரொருவர் இதற்கு முன்னர் தங்க மோதிரமொன்றை வழங்கி புத்தளம் நகரிலுள்ள நிதி நிறுவனமொன்றிடமிருந்து பணம் பெற்றுக்கொண்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. வாடகைக்கு பெற்றுக்கொண்ட கார் ஒன்றிலேயே சந்தேகநபர்கள் பயணித்துள்ளார்கள்.

யாத்திரை ஒன்றுக்கு செல்வதாக தெரிவித்து இந்த காரை அவர்கள் பெற்றுக்கொண்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் இருவரும் அவர்களினால் திருடப்பட்ட தங்க ஆபரணத்துடன் மேலதிக விசாரணைகளுக்காக ஆனமடுவ பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.


திகதி 03.08.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4836
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,443,060.00
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 7 8 8 5 4 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 29,393,276.60

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3078
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,490,900.00
ஆங்கில எழுத்து U வெற்றி இலக்கங்கள் 24 26 42 76
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 66,908,206.00

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 866
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,827,500.00
வெற்றி இலக்கினம் J வெற்றி இலக்கங்கள் 21 55 59 62
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 120,194,057.60

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 145
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,129,480.00
இலக்கினம் மகரம் வெற்றி இலக்கங்கள் 01 06 27 35
விசேட இலக்கினம் மகரம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,566,304.20

கோடி 26+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1184
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 12,516,580.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 263,999,214.00
J 09 30 42 70 74
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk

# மாளிகைக்காட்டில் அனுமதியின்றி சிலை வைக்கும் முயற்சி பிரதேசவாசிகளால் முறியடிப்பு!







(மாளிகைக்காடு நிருபர்)

சமூக நல்லிணக்கத்தைக் குழப்பும் நோக்கில் காரைதீவைச் சேர்ந்த சிலரினால் நேற்று (04) காலை முன்னெடுக்கப்பட்ட சித்தானைக்குட்டி சுவாமிகளின் சிலை வைக்கும் முயற்சி மாளிகைக்காடு பிரதேச சமூக ஆர்வலர்களினால் முறியடிக்கப்பட்டது.

காரைதீவு பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட மாளிகைக்காடு மேற்கு பிரதேசத்தில் பிரதான வீதியில் அமைந்துள்ள யூசுப் லெப்பை மொஹம்மட் நியால் எனும் பாதுகாப்புப் படை உத்தியோகத்தருக்குச் சொந்தமான காணியில் சட்டவிரோதமாக காரைதீவு பிரதேச சபையினால் அமைக்கப்பட்டதாக கூறப்படும் பஸ் தரிப்பு கூரையின் மேல்தளத்தில் சித்தானைக்குட்டி சுவாமிகளின் சிலையொன்றை நிறுவ சிலர் முயற்சிகளை மேற்கொண்டு நிர்மாண வேலைகளை நேற்று (04) காலை மேற்கொண்டனர்.

இதனையறிந்த சம்பவ இடத்திற்குச் சென்ற காரைதீவு பிரதேச சபையின் உறுப்பினர் எம்.எச்.எம்.இஸ்மாயில், அல்-மீஸான் பௌண்டேஷன் தவிசாளர் யூ.எல்.என்.ஹுதா உட்பட சமூக ஆர்வலர்கள், பிரதேச இளைஞர்கள் சிலை வைக்க முற்பட்டோரிடம் சிலை வைப்புக்கான அனுமதிகள் மற்றும்





நியாயப்பாடுகள் தொடர்பில் கேட்டதுடன், சிலை வைப்பானது சட்டவிரோதமாக இடம்பெறுவது ஊர்ஜிதப்படுத்தப்பட்டது. இந்நிலையில், சிலை வைப்பு நடவடிக்கையை முறியடித்து சிலை வைக்க முற்பட்டோரை திருப்பி அனுப்பிவைத்தனர்.

இந்த சிலை வைப்பானது காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கி.ஜெயசிறிலின் பணிப்புக்கு இணங்க இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டாலும் கூட சபை தீர்மானங்களோ அல்லது சபை அனுமதியோ பெறப்பட்டிருக்கவில்லை என்பதுடன், காணி உரிமையாளர் யூசுப் லெப்பை மொஹம்மட் நியால் என்பவருக்கு தெரியப்படுத்தவும் இல்லை.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அனுமதி பெறாமல் இந்த சிலை வைப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளதாக கல்முனை நிறைவேற்று பொறியியலாளர் இசட்.ஏ.எம்.அஸ்மீர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

எனக்கு சொந்தமான காணியில் சட்ட விரோதமாக காரைதீவு பிரதேச சபையினால் அமைக்கப்பட்டுள்ள பஸ் தரிப்பு இடம் தொடர்பில் சட்டநடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு, பல்வேறு தரப்பு விசாரணைகள் இடம்பெற்றுவரும் நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் சட்ட நடவடிக்கைகளை தான் முன்னெடுத்து வருவதாகவும் காணி உரிமையாளர் யூசுப் லெப்பை மொஹம்மட் நியால் தெரிவித்தார்.

# ஒலுவில் மீன்பிடித் துறைமுக புனரமைப்பு; கடற்றொழில் அமைச்சில் கலந்துரையாடல்





ஒலுவில் மீன்பிடித் துறைமுகத்தின் புனரமைப்புப் பணிகள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் கடற்றொழில் அமைச்சில் நேற்று முன்தினம் (03) கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் துறைசார் அதிகாரிகள் உட்பட சம்பந்தப்பட்ட தரப்பினர் கலந்துகொண்டிருந்த நிலையில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமும் கலந்துகொண்டு அம்பாறை மாவட்ட மக்களின் அபிப்பிராயங்களையும் எதிர்பார்ப்புகளையும் வெளிப்படுத்தியிருந்தார்.

ஒலுவில் துறைமுகத்தை நவீன வசதிகளைக்கொண்ட மீன்பிடித் துறைமுகமாக உருவாக்குவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னெடுத்து வருகின்ற முயற்சிகளின் அடிப்படையில், புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கிண்ணியாவில் ஹெரோயினுடன் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் கைது

(சீனக்குடா, திருகோணமலை நிருபர்கள்)

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சின்னக் கிண்ணியா, அக்ரம் வீதியில் ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த இளைஞரொருவர் திருகோணமலை பிராந்திய போதைப்பொருள் தடுப்புப் பிரிவால் நேற்று (04) கைதுசெய்யப்பட்டு, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கைதான நபர்களிடமிருந்து 2.03 கிராம் நிறைகொண்ட ஹெரோயின் பொதி ஒன்று கைப்பற்றப்பட்டதாக போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

சின்னக் கிண்ணியா அக்ரம் வீதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவராவார்.

இவர், மூதூர் பிரதேச பாடசாலை ஒன்றில் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளராக கடமையாற்றி வருபவர் என்றும், இவருக்கு போதைப்பொருள் பாவிக்கும் பழக்கம் இருப்பதோடு, இவர் நீண்டகாலமாக போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வருபவர் எனவும் விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்தனர்.

# காத்தான்குடியில் 135 லீற்றர் டீசலை பதுக்கிவைத்து அதிக விலைக்கு விற்பனை செய்த ஒருவர் கைது

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஆரையம்பதி செல்வா நகர் கிழக்கு பிரதேசத்தில் டீசலை பதுக்கிவைத்து கூடிய விலைக்கு விற்பனை செய்த நபர் ஒருவர் கடந்த திங்கட்கிழமை மாலை கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவரிடமிருந்து 135 லீற்றர் டீசலையும் காத்தான்குடி பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

ஆரையம்பதி செல்வநகர் கிழக்கு பிரதேசத்தில் டீசலை பதுக்கிவைத்து அதிக விலைக்கு விற்பனை செய்வதாக காத்தான்குடி பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து, மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துமிந்த நயனசிறியின் ஆலோசனையுடன் காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ரஹீம் தலைமையில் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின்போது இந்த டீசல் கைப்பற்றப்பட்டதுடன், ஒருவர் கைதுசெய்யப்பட்டதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மட்டக்களப்பு தில்லை மண்டூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம்



(மட்டக்களப்பு நிருபர்)

கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு தில்லை மண்டூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 21.08.2022 ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து இருபது நாட்கள் சிறப்புத் திருவிழாக்கள் இடம்பெறுவதுடன், 21ஆம் நாளான 10.09.2022 திகதி சனிக்கிழமை தீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளது.


மண்டூர் கந்தசுவாமி ஆலயமானது மட்டக்களப்பின் திருப்படைக் கோயில்களில் ஒன்றாக விளங்கினாலும் ஆகம நெறிசாரா பூசைகள் நிகழும் ஆலயங்களில் கதிர்காமத்தை ஒத்திருப்பதால் சின்னக்கதிர்காமம் என்று சிறப்பித்துக் கூறப்படும் புண்ணிய தலமாகும்.

மேலைத்தேய அந்நியர் ஆட்சிக்காலத்தில் இவ்வாலயத்தை அவர்கள் அழிப்பதற்காக முற்பட்டபோது முருகப்பெருமான் குளவிப்படை கொண்டு அவர்களை தடுத்து நிறுத்தியதாக வரலாற்று ரீதியான கதையொன்றும் உள்ளது.

மட்டக்களப்பின் முருகன் ஆலயங்கள் பொதுவாக கிழக்கு நோக்கியே அமைந்திருக்கும் இந்நிலையில், மண்டூர் முருகனுக்கு தெற்கு நோக்கிய பார்வை இருப்பது கவனிக்கத்தக்கது. இயம கண்டத்திலிருந்து மக்களை பாதுகாப்பதற்கே இந்நிலை எனக் கூறப்பட்டாலும் கதிர்காமம் நோக்கிய பார்வையாக இதனைக் கருதமுடியும்.

வேண்டுவோர்க்கு வரமளிக்கும் மண்டூர் முருகப் பெருமானது உற்சவகால நிகழ்வுகளில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் அதிகளவான பக்தர்கள் கலந்துகொள்வர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இ.போ.ச. மட்டக்களப்பு சாலை முகாமையாளராக சிறிதரன் நியமனம்



(மட்டக்களப்பு நிருபர்)

இலங்கை போக்குவரத்து சபை மட்டக்களப்பு சாலை முகாமையாளராக கந்தசாமி சிறிதரன் நேற்று முன்தினம் (03) தனது கடமையை பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார்.

2015 முதல் 2020 வரையான காலப் பகுதியில் இலங்கை போக்குவரத்து சபை மட்டக்களப்பு சாலை பிரதி முகாமை யாளராகவும் பின்னர் பதவியுயர்வு பெற்று இலங்கை போக்குவரத்து சபை கிழக்கு பிராந்திய நிர்வாக உத்தியோகத்தராகவும் பதவி வகித்து வந்தார்.

இந்நிலையிலேயே குறித்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

# பட்டிருப்பு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் பட்டப்பகலில் களவாடப்பட்ட உண்டியல்





(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம், பட்டிருப்பு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தின் உண்டியல் நேற்று (04) முற்பகல் சுமார் 10 மணியளவில் களவாடப்பட்டுள்ளதாக அந்த ஆலயத்தின் தலைவர் இ.ரமேஸ் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வழக்கம்போல் ஆலயத்தில் பூஜை செய்வதற்காக நேற்று சென்ற அவ்வாலய குருக்கள் ஆலயத்தினுள் வைக்கப்பட்டிருந்த உண்டியல் இல்லாமல் உள்ளதை அவதானித்துள்ளார். ஆலய உட்புறத்தை சுற்றிப் பார்த்தவேளை, ஆலயத்தினுள் வடக்குப்புறமாக குறித்த உண்டியல் உடைக்கப்பட்டு கிடப்பதை அவதானித்துள்ளார். பின்னர் ஆலய தலைவருக்கு அறிவித்துள்ளார்.

வழக்கமாக ஆலயத்திற்கு பகல் காவலாளி வைப்பதில்லை, கதிர்காம பாதயாத்திரிகர்கள் ஆலயத்திற்கு வந்து செல்வதனால் ஆலயத்தின் முன் வாயிற்கதவு பகலில் திறந்துவிடப்பட்டுள்ளது. இந்நிலையில், நேற்று முற்பகல் வேளையில், யாரோ மிகவும் தந்திரமான முறையில் ஆலயத்தினுள் உட்புகுந்து முன்னால் வைத்திருந்த உண்டியலை எடுத்து, ஆலயத்தின் வடக்குப் பக்கமாக கொண்டு வைத்து, ஆலயத்திலிருந்த சூலத்தால் எடுத்துடைத்து அதிலிருந்த பணத்தை எடுத்துச் சென்றுள்ளனர்.

உண்டியலில் எவ்வளவு பணம் இருந்தது என்பது எமக்குத் தெரியாது. ஆனாலும் ஆலயத்தின் சொத்துகளைத் திருடித் தின்பவர்களை தெய்வ பாவம் அவர்களை சும்மா விடாது. இவ்விடயம் குறித்து களுவாஞ்சிக்குடி பொலிஸாருக்கு நாம் அறிவித்துள்ளோம் என ஆலயத்தின் தலைவர் இ.ரமேஸ் மேலும் தெரிவித்தார்.

# ஆரையம்பதியில் வன்முறைத் தீவிரவாதத்தை தணித்தல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு





(மட்டக்களப்பு நிருபர்)

"இலங்கையில் வன்முறைத் தீவிரவாதத்தைத் தணித்தலுக்காக சமூகமட்ட அமைப்புகளை திறன்விருத்தி செய்தல்" எனும் செயற்றிட்டத்தில் வளவாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டு, விழிப்புணர்வு நிகழ்வுகள் இடம்பெற்று வருவதாக செயற்பாட்டாளர் எப்.எச்.எம்.சர்மிலா தெரிவித்தார்.

இத்தகையதொரு விழிப்புணர்வு நிகழ்வு கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசாரப்பீடத்தின் விரிவுரையாளர்கள், மாணவர்களின் உதவியோடு தமிழ், முஸ்லிம் மக்கள் இணைந்து வாழும் மட்டக்களப்பு காத்தான்குடியை அண்டிய ஆரையம்பதி பகுதியில் நேற்று (04) ஆரம்பித்துவைக்கப்பட்டது.

மண்முனைப்பற்று பிரதேச செயலக வளாகத்தில் பிரதேச செயலாளர் என். சத்தியானந்தியின் தலைமையில் ஆரம்பித்துவைக்கப்பட்ட இந்நிகழ்வில் பிரதேச செயலக அலுவலர்கள் பங்குபற்றினர்.

கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை முதுநிலை விரிவுரையாளர் சு.சந்திரகுமாரின் ஆக்கத்தில் எழுதப்பட்ட இன ஒருமைப்பாட்டுக்கான விளையாட்டுகளுடனும் பாடல்களுடனும் தெரு நாடகங்கள் இடம்பெறுகின்றன.

வன்முறையற்ற வாழ்வை வலியுறுத்த இது நடத்தப்படுகிறது என்று தகவல் பயிற்சி நிலையத்தின் தலைமை செயற்பாட்டு அலுவலர் பி.பெனிங்னஸ் தெரிவிக்கிறார். இந்நிகழ்வுகளைப் பார்வையிட பொதுமக்களும் வருகை தந்திருந்தனர்.

தேசிய சமாதானப்பேரவை ஹெல்விற்றாஸ் ஸ்ரீலங்கா (Helvetas - Sri Lanka) ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் நிதியுதவியுடன் தகவல் பயிற்சி நிலையத்தின் ஊடாக இந்நிகழ்வு நடத்தப்பட்டு வருகிறது.

# காத்தான்குடி காரிகை கலை இலக்கிய கழகத்தின் கலை நிகழ்வு - 2022







(மட்டக்களப்பு நிருபர்)

காத்தான்குடி பெண்கலை ஆளுமைகளுக்கான காரிகை கலை இலக்கியக் கழகத்தின் கலை நிகழ்வுகள் அண்மையில் புதிய காத்தான்குடியில் இடம்பெற்றுள்ளது.

காரிகை கலை இலக்கியக் கழகத்தின் ஸ்தாபகத் தலைவியும் நிர்வாக உத்தியோகத்தருமான திருமதி ஜாஹிதா ஜலால்தீன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுக்கு அதிதிகளாக சிரேஷ்ட கலை இலக்கிய ஆளுமைகளான நஸீலா மீரா முகைதீன், றயீஸா நியாஸ், பஹ்மியா ஷரீப், பௌசியா கபூர் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளனர்.

மௌலவி எம்.பீ.எம்.பாஹிம் (பலாஹி) அவர்களின் இறைவணக்கத்துடன் ஆரம்பமாகிய நிகழ்வில், காரிகை இலக்கியக் கழக செயலாளர் திருமதி ஹாஜறா கலீலுர் ரஹ்மான் ஆசிரியையால் வரவேற்புரையும், ஸ்தாபகத் தலைவி இலக்கியச் சுடர் திருமதி ஜாஹிதா ஜலால்தீனினால் தலைமையுரையும் நிகழ்த்தப்பட்டன.

அதன்பின் திருமதி ஜெஸ்மின் றமீஸ் வாழ்த்துக் கவியும், சுட்டிக் குழந்தை நூர் அல்ஹயாவினால் அபிநயப் பாடலும், காரிகை கலை இலக்கிய கழக உபதலைவி திருமதி அஜீரா கலீல்தீன்னால் ஓரங்க நாடகம் ஒன்றும் மிக சிறப்பாக அரங்கேற்றப்பட்டன.

அத்துடன், திருமதி எஸ்.எச்.சப்ரினாவின் சிறுகதை வாசிப்பு, திருமதி ஜுஸ்லா றமீஸுக்கு பின் நவீனக் கவிபாடல் என்பன இடம்பெற்றன. ஆசிரியை திருமதி பௌசியா றிசானால் நெறியாள்கை செய்யப்பட்ட கதம்பம் நிகழ்வு அனைவரையும் மகிழ்ச்சியூட்டியதுடன், தொடர்ந்து காரிகை கலை இலக்கிய கழக செயலாளர் திருமதி. ஹாஜறா கலீலுர் ரஹ்மானால் இனிமையான கவிதை ஒன்றும் வாசிக்கப்பட்டது.

அதன்பின்னர் திருமதி பௌசானா பிஸ்றுல் ஹாபி ஆசிரியை நெறியாள்கை செய்து மாணவிகளால் சிறப்புற வழங்கப்பட்ட நாட்டார் பாடல் அனைவரது கவனத்தையும் ஈர்த்தமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து அதிதிகள் சார்பாக மட்டக்களப்பு மாவட்ட கலாசார உத்தியோகத்தர் மலர்ச்செல்வன் உரையாற்றியதுடன், திருமதி.ஜெஸ்மின் றமீஸ் நன்றியுரை வழங்க, நிகழ்ச்சிகள் அனைத்தையும் திருமதி முப்லிஹா பிர்தவ்ஸ் ஆசிரியை நெறியாள்கை செய்து தொகுத்து வழங்கியிருந்தார்.

# கல்முனையில் மாட்டிறைச்சிக்கு கட்டுப்பாட்டு விலை; கிலோ 1600 ரூபாவாக நிர்ணயம் செய்தார் முதல்வர் றகீப்

## டிஜிட்டல் தராசு பயன்படுத்துமாறும் பணிப்பு

(அம்பாறை, சாய்ந்தமருது நிருபர்கள்)



கல்முனை மாநகராட்சி ஆட்புல எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் 01 கிலோ கிராம் மாட்டிறைச்சியின் அதிகூடிய விலையாக 1,600 ரூபா கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

நாட்டின் அசாதாரண சூழ் நிலையை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு, கல்முனை மாநகர பிரதேசங்களில் ஒரு கிலோ கிராம் மாட்டிறைச்சி 2,200 ரூபாவுக்கு மேல் விற்கப்படுவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளைக் கவனத்திற்கொண்டு, மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப், நாளை 06ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் அமுலுக்கு வரும்வகையில் இந்த நிர்ணய விலையை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக கல்முனை மாநகர சபைக்குட்பட்ட மாட்டிறைச்சி விற்பனையாளர்கள், நேற்று முன்தினம் புதன்கிழமை (03) மாலை, மாநகர முதல்வரினால் மாநகர சபைக்கு நேரடியாக அழைக்கப்பட்டு, இறைச்சி வியாபாரத்தின்போது அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் செலவீனங்கள் குறித்து கேட்டறியப்பட்டு, அவற்றுக்குரிய தீர்வுகள் முன்மொழியப்பட்ட நிலையில், அவர்களது இணக்கத்துடன் மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் 01 கிலோ கிராம் மாட்டிறைச்சி 1,600 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவேண்டும் எனவும் அதில் ஆகக்கூடியது 200 கிராம் மாத்திரமே முள் அடங்கியிருத்தல் வேண்டும் எனவும் அனைத்து இறைச்சிக் கடைகளிலும் டிஜிட்டல் தராசு பயன்படுத்தப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனை மீறும் மாட்டிறைச்சி வியாபாரிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், மாட்டிறைச்சிக் கடைக்கான வியாபார உரிமம் இரத்துசெய்யப்படும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, இறைச்சிக் கடைக் காரர்களுக்கு மாடுகளை விற்பனை செய்வோர் மாநகர சபையில் தம்மைப் பதிவுசெய்து, அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் ஒரு கிலோ கிராம் இறைச்சியை ஆகக்கூடியது 1,300 ரூபாப்படி வழங்க வேண்டும் எனவும் முதல்வரினால் உத்தரவிடப்பட்டிருக்கிறது.

இதனை மீறும் மாடு வியாபாரிகள் பொலிஸார் மூலம் கைதுசெய்யப்பட்டு, கடுமையான சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவதுடன், மாடுகளும் பறிமுதல் செய்யப்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாட்டிறைச்சி வியாபாரிகளுடனான இக்கலந்துரையாடலை ஆரம்பித்துவைத்து முதல்வர் ஏ.எம்.றகீப் கருத்துரைக்கையில், அம்பாறை மாவட்டத்தின் ஏனைய பல பிரதேசங்களில் மாட்டிறைச்சியானது 1200 ரூபா, 1400 ரூபா தொடக்கம் 1600 ரூபா வரை விற்கப்படுகின்றபோது ஏன் கல்முனையில் மாத்திரம் 2200 ரூபாவுக்கு மேல் அநியாயமாக விற்பனை செய்கின்றீர்கள் என்று விசனம் தெரிவித்தார்.

மிகவும் கஷ்டமான இக்காலகட்டத்தில் எமது மக்களின் உணவுத் தேவையை நிறைவுசெய்வதில் இவ்வளவு கொள்ளை இலாபத்தை ஈட்டுவது மனசாட்சிக்கு விரோதமாகத் தெரியவில்லையா? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

நாட்டு நிலைமையை உங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு நாளுக்கு நாள் உங்கள் இஷ்டம்போல் விலையைக் கூட்டிக்கொண்டு போவதை இனியும் அனுமதிக்க முடியாது. இறைச்சிக்கடைகளை இழுத்து மூடவேண்டியேற்பட்டாலும் பரவாயில்லை கொள்ளை இலாபத்தில் இறைச்சி விற்பதை அனுமதிக்க மாட்டேன் என்றும் முதல்வர் தனது நிலைப்பாட்டை உறுதியாக வெளிப்படுத்தியிருந்தார்.

# கல்முனை மாநகர சபையின் சேவைகள் தொடர்பான முறைப்பாடுகளை தெரிவிக்க விசேட கருமபீடம்

## மாநகர முதல்வரால் ஆரம்பிப்பு

(அம்பாறை நிருபர்)




கல்முனை மாநகர சபையின் சேவைகள் தொடர்பான முறைப்பாடுகளை பொதுமக்களிடமிருந்து உடனுக்குடன் பெற்றுக்கொள்வதற்காக Call Centre (அழைப்பு நிலையம்) எனும் விசேட கருமபீடமொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீபின் ஆலோசனை, வழிகாட்டலில் கல்முனை மாநகர சபையின் பழைய கட்டடத்தொகுதியில் நிறுவப்பட்டுள்ள இந்நிலையத்தில் பொதுமக்கள் தமது முறைப்பாடுகளை அலுவலக நேரத்தில் 0672030000 எனும் Hotline இலக்கத்திற்கோ அல்லது நேரடியாக வருகைதந்து வாய்மூலமாகவோ அல்லது எழுத்துமூலமாகவோ தெரிவிக்கமுடியும்.

திண்மக்கழிவகற்றல் சேவை, தெருவிளக்கு பராமரிப்பு, வடிகான் பராமரிப்பு உட்பட மாநகர சபையினால் முன்னெடுக்கப்படுகின்ற எந்தவொரு சேவை தொடர்பிலும் இவ்வாறு முறைப்பாடளிக்க முடியும்.

கொரோனா பெருந்தொற்று, எரிபொருள் தட்டுப்பாடு உட்பட நாட்டின் அசாதாரண சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, பொதுமக்கள் சிரமமின்றி இலகுவாகவும் விரைவாகவும் தமது முறைப்பாடுகளை முன்வைத்து, உரிய தீர்வுகளை பெற்றுக்கொள்ளும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ள இந்த Call Centre கருமபீடத்தை கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பொதுமக்கள் முறையாக பயன்படுத்தி, ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# திக்கோடை தளவாய் பகுதியில் காட்டு யானை தாக்கி ஒருவர் பலி!

(கல்லடி நிருபர்)


போரதீவுபற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திக்கோடை தளவாய் காட்டுப்பகுதியில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அருள்நேசபுரம், கடுக்காமுனை கிராமத்தில் வசிக்கும் இராசசிங்கம் மோசிகவாகனம் (வயது-57) என்பவரே காட்டு யானை தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்துள்ளதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

கடுக்காமுனை பகுதியிலிருந்து விறகு எடுப்பதற்காக 3 பேர் திக்கோடை தளவாய் காட்டுப்பகுதிக்கு சென்றபோது மறைந்திருந்த காட்டுயானை துரத்தியுள்ளது. இதன்போது ஏனைய இருவரும் தப்பி ஓடியுள்ள நிலையில், ஒருவர் காட்டு யானை தாக்குதலினால் உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# போடியார் புலம்பல்!



**கூட்டமைப்பு எம்.பிமார் சிலர் தமக்கு வாக்களித்தது தனக்கு தெரியும் எண்டு ரணில் முகத்தில அடிச்சமாதிரி சொல்லிக்குறாரு எலுவா?**

**வாக்களிச்ச அந்த கறுப்பு ஆடுகள் ஆரு எண்டதான் விளங்கல்ல. இரகசிய வாக்கெடுப்பு எண்டதால காசையும் இரகசியமாகத்தானே வாங்கி இருப்பாங்க ...**

**காசி குடுத்த பட்டியலில தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிமார் சிலரிட பெயர் இருக்குப்போல. அதுதான் அச்சொட்டா இடிச்சி சொன்னவர் எண்டத நம்ம புரிஞ்சா சரிதான்..**

# சாய்ந்தமருது ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் முன்களப் பணியாளர்களுக்கு எரிபொருள் விநியோகம்

(மாளிகைக்காடு நிருபர்)





சாய்ந்தமருது ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் விவசாய நடவடிக்கைகளுக்கான எரிபொருள் விநியோகம் இடம்பெற்றதுடன், அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக்கின் வழிகாட்டலுடன் வாகனங்களுக்கான QR குறியீட்டுடன் கூடிய எரிபொருள் விநியோகமும் இங்கு மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை, வாகனங்களின் இறுதி இலக்கங்களுக்கு அமைய கடந்த தினங்களாக எரிபொருளை பெற்றுக்கொள்ளாத பொதுமக்களுக்கும் நேற்று (04) எரிபொருள் வழங்கப்பட்டது. இதன்போது மோட்டார்சைக்கிள்களுக்கு 4 லீற்றரும், முச்சக்கர வண்டிகளுக்கு 5 லீற்றரும், சொகுசு கார் வாகனங்களுக்கு 20 லீற்றரும் எரிபொருள் வழங்கப்பட்டது.

அத்துடன், கர்ப்பிணிகள், மதத் தலைவர்கள், பொலிஸார், சுகாதார வைத்திய அதிகாரிகள், பொது சுகாதாரப் பரிசோதகர்கள், நோய்ப் பிணியாளர்கள், அவசர சேவையாளர்கள், ஊடகவியலாளர்கள், சுகாதாரத்துறையினர் உட்பட முன்களப் பணியாளர்களுக்கு சாய்ந்தமருது ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலைய நிர்வாகத்தின் விசேட நடைமுறைகளின் பிரகாரம் இடையிடையே முன்னுரிமை வழங்கப்பட்டு எரிபொருள் பெற்றுக்கொடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

முன்களப்பணியாளர்கள் பலருக்கும் முன்னுரிமை அடிப்படையில் எரிபொருளை இலகுவாக பெற நடவடிக்கை எடுத்த கல்முனை மாநகர பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.கே.எம்.அர்ஷத் காரியப்பர், ஊடகவியலாளர் நூருல் ஹுதா உமர், காரைதீவு பிரதேச சபை உறுப்பினர் ஏ.ஆர்.எம்.பஸ்மீர், முன்னாள் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் எப்.எம்.தில்சாத் ஆகியோருக்கு நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்தனர்.

பிரதேச மீனவர்களுக்கு போதியளவிலான எரிபொருளை பெற்றுக்கொடுக்க சாய்ந்தமருது ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலைய நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. எனினும், இன்னும் பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் சரியாக பின்பற்றப்படாமையால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

# வாகனேரி குளத்தில் மீன்பிடிக்கச் சென்றோருக்கு குளவிக்கொட்டு

## 3 சிறுவர்கள் உட்பட அறுவர் வைத்தியசாலையில்





(வாழைச்சேனை நிருபர்)

மட்டக்களப்பு வாகனேரி பெட்டைக் குளத்தில் மீன்பிடிக்கச் சென்றவர்கள் சிலர் குளவிக்கொட்டுக்கு இலக்காகி வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்கள் பிரதேசத்தில் உள்ள குளத்தில் மீன் பிடித்து தங்களது வாழ்வாதாரததினை மேற்கொண்டு வந்தனர். வழக்கம்போல் நேற்று முன்தினம் காலை (03) மீன்பிடிக்கச் சென்றவர்கள் மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது எங்கேயோ இருந்து வந்த குளவிக் கூட்டம் அவர்களை துரத்தி துரத்திக் கொட்டியுள்ளது.

குளவியின் தாக்கத்திலிருந்து தப்புவதற்காக குளத்து நீரினுள் மூழ்கியும், கொண்டுசென்ற துணிகளை போர்வையாக பயன்படுத்தியும் பிடித்த மீன்களை கைவிட்டு தப்பித்து பாதுகாப்பு பெற்றதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். 3 சிறுவர்கள் உட்பட 6 பேர் பாதிப்புக்குள்ளாகி சிகிச்சைபெற்று வருகின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# தேசிய காங்கிரஸ் தலைவர் அதாவுல்லா ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் சந்திப்பு

(மாளிகைக்காடு நிருபர்)



நாட்டின் சமூக, பொருளாதார ஸ்திரத்தன்மையை நிறுவும் நோக்கில் சர்வகட்சிகள் அடங்கிய தேசிய நிகழ்ச்சித் திட்டமொன்றை உருவாக்கு வற்கான முன்னெடுப்பில் செயற்பட்டுவரும் நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, குறித்த செயற்றிட்டத்திற்கு ஆதரவுகோரி தேசிய காங்கிரஸ் தலைவருக்கும் உத்தியோகபூர்வமாக கடிதம் மூலம் அழைப்பு விடுத்திருந்தார். அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி கடந்த 02.08.2022 அன்று நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சி என்கின்ற வகையில் குறித்த தேசிய செயற்றிட்டம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக தேசிய காங்கிரஸ் தலைவருடன் நேரடி சந்திப்பையும் ஏற்பாடு செய்திருந்தார்.

ஜனாதிபதியின் தேசிய சர்வகட்சி முன்னெடுப்பு அழைப்பிற்கான பதிலை கடிதம் மூலம் ஜனாதிபதியிடம் கையளித்த தேசிய காங்கிரஸ் தலைவர், நாட்டில் தற்போது நிலவும் சமூக, பொருளாதார, நெருக்கடி நிலைமைகளை தீர்ப்பதற்கான சர்வகட்சி அரசாங்கத்தில் இணைந்து ஒத்துழைப்பு வழங்குவதற்கு ஆதரவை வெளிப்படுத்தியிருந்தார்.

இச்சந்திப்பின்போது தேசிய காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா, அக்கட்சியின் சிரேஷ்ட பிரதித் தலைவர் ஏ.உதுமாலெப்பை ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

19ஆவது திருத்தச்சட்டத்தை மீண்டும் அறிமுகம் செய்வதைவிட, காலத்தின் தேவை கருதி இருபதாவது திருத்தத்தில் அவசியமான திருத்தங்களை மாத்திரம் கொண்டுவருவதன்மூலம் தீர்வுகாண்பதோடு, புதிய அரசியலமைப்பை அறிமுகம் செய்வதன்மூலம் நிரந்தர தீர்வை காண்பதே அவசியமானது என்பதை தேசிய காங்கிரஸ் தலைவர் இச்சந்திப்பின்போது வலியுறுத்தினார்.


மேலும், புதிய அரசியலமைப்புக்கான செயற்பாடுகளை பூர்த்திசெய்யும்வரை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை முற்றாக நீக்குவதென்பது, நாட்டின் இறைமை, தேசிய பாதுகாப்பு மற்றும் சகல இனங்களுக்குமான ஜனநாயக காப்பீடு போன்ற விடயங்களை கருத்திற்கொள்கையில் தற்போது உசிதமானதல்ல. மேலும் நாட்டின் சுதேச வளங்களை முறையாகப் பயன்படுத்தி போஷாக்கு உணவு உட்பட பால் உற்பத்தி மற்றும் குறைந்த விலையில் எரிபொருள் விநியோகம் போன்ற நீண்டகால பிரச்சினைகளுக்கும் முறையான நிரந்தர திட்டங்களை அறிமுகம் செய்வதன் முக்கியத்துவம் பற்றியும் அதற்கான பொறிமுறை பற்றியும் தேசிய காங்கிரஸ் தரப்பு வலியுறுத்தியமை குறிப்பிடத்தக்கது.

மேலும், ஏற்கனவே நாடாளுமன்றில் எதிர்க்கட்சிகள் 21ஆவது திருத்தச்சட்டத்தினை சமர்ப்பித்துள்ள நிலையில், அரசாங்கம் கொண்டுவர உத்தேசித்துள்ள திருத்தச் சட்டத்திற்குரிய மாற்று திருத்த முன்மொழிவுகளை தேசிய காங்கிரஸ் ஏற்கனவே சமர்ப்பித்துள்ளது. அதற்கு பதிலளித்த ஜனாதிபதி, தேசிய காங்கிரஸின் குறித்த முன்மொழிவுகளை பரிசீலிப்பதாகவும் எடுத்துரைத்தார்.

# 24 ஆயிரம் ஏக்கருக்கு மேல் விவசாய காணியுள்ள சம்மாந்துறையில் 52 சதவீத மக்கள் அரச உதவியில் தங்கியிருப்பது கவலையளிக்கிறது

## பிரதேச சபை தவிசாளர் நௌசாட்

(மாளிகைக்காடு நிருபர்)




வறுமைக்கோட்டுக்குக்கீழ் வாழ்கின்றோம் என்ற பிரகடனத்துடன் சம்மாந்துறையில் ஏறத்தாழ 52 சதவீதமான குடும்பங்கள் அரச உதவியிலேயே தங்கி வாழ்கின்றன. இதனை சம்மாந்துறையின் குடிமகனாக ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. என்னுடைய மனதில் நீண்டகாலமாக இருந்துவரும் இந்த மனக்குறையைப் பற்றி சம்மாந்துறை பிரதேச செயலாளரிடம் தெரிவித்திருக்கிறேன். இது வெட்கப்படும் விடயமாகவே உள்ளது. 24 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட விவசாய காணிகள் உள்ளன. அதில் பயிர்ச்செய்கைகளும் இடம்பெறுகின்றன.. ஆனால், 52 சதவீதமான குடும்பங்கள் அரச உதவியிலேயே தங்கி வாழ்கின்றன என்றால் அதனை எப்படி நியாயப்படுத்த முடியும் - என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளருமான ஏ.எம்.எம்.நௌசாட் கேள்வியெழுப்பினார்.

சம்மாந்துறை சமூக சேவைகள் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டு ஒன்றிய அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், மாற்றங்கள் அவரவர் மனதிலிருந்தும், அடிப்படையிலிருந்து வர வேண்டும். அரச அல்லது தனியார் உதவிகள் சரியாக இனங்கண்டு உரியவர்களுக்கு கொண்டு சேர்க்கப்பட வேண்டும். பிழையான தகவல்களை வழங்கி அரச, தனியார் உதவிகள் பெறுவது பாவம் (பிழை) என்ற நிலைக்கு மக்களாகிய நாம் வரவேண்டும். அதைத்தான் இறைவனும் ஏற்றுக்கொள்வான்.

நாட்டின் நிலையை கருத்திற்கொண்டு உணவின்றி இருக்கும் மக்களுக்காக ஏதாவது செய்வது தொடர்பில் சம்மாந்துறை முக்கிய அமைப்புகளுடன் அண்மையில் கலந்துரையாடல் ஒன்றை செய்திருந்தேன். ஆனால், சம்மாந்துறையின் இளைஞர்கள் தாமாக முன்வந்து அந்தப் பணியை வெற்றிகரமாக செய்தார்கள். இதன்போது சேகரிக்கப்பட்ட அவர்களின் தகவல்களை அடிப்படையாகக்கொண்டு இனிவரும் காலங்களில் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுக்க முடியும் என்று நம்புகிறேன். சமூக சேவைகள் இறைவனுக்கு பயந்து முன்னெடுக்கப்பட வேண்டும். பயனாளிகளை பகிரங்கப்படுத்தி அவர்களை பொதுவெளியில் சங்கடப்படுத்துவது எப்போதும் யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

இன்று நாம் இருக்கும் நிலைக்கு நாம் எல்லோரும் பொறுப்பாளிகள். வருமானத்தை மீறி செலவு செய்யும் பழக்கத்தினால்தான் இன்று இந்த நிலை உருவாகியுள்ளது. சம்மாந்துறை பிரதேசத்தில் 300இற்கும் மேற்பட்ட சமூக சேவைகள் அமைப்புகள் இருக்கின்றன. ஆனால் இயங்குநிலையில் உள்ளது விரல்விட்டு என்னும் அளவுக்கே இருக்கிறது. இதனை பெரும் குறைபாடாக நான் பார்க்கிறேன். என்னுடைய பொதுவாழ்வில் நான் நிறைய விடயங்களை அறிந்துகொண்டு அதனூடாக என்ன வழிகாட்டல் இருக்கின்றது என்று பார்க்கிறேன்.

சமூக சேவைகள் மூலம் சமூகம் கட்டியெழுப்பப் பட வேண்டும். இப்போது அரசியல் எனும் சொல் மக்களுக்கு மிகவும் வெறுப்பாக மாறியுள்ளது. சமூக சேவை அமைப்புகளுடன் இணைந்து பிரதேசத்தின் கட்டமைப்பில் மேம்பாட்டை உருவாக்க எப்போதும் தயாராக இருக்கிறோம் - என்றார்.



## தாய்வானை சுற்றிவளைத்து சீனா போர் ஒத்திகை




# போர் தொடுத்தால் ஒட்டுமொத்த உலக நாடுகளும் முடங்கும் அபாயம்




அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசி தாய்வானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட நிலையில் சீனா தாய்வானை சுற்றிவளைத்து போர் ஒத்திகையில் ஈடுபட்டு வருகிறது. அதனால் பதற்றமான சூழல் நிலவி வருகிறது.

இந்நிலையில், தாய்வான் கடல் எல்லைக்குள் ஏவுகணைகளை வீசி சீன இராணுவம் போர்ப் பயிற்சியில் ஈடுபட்ட நிழற்படங்கள் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

**''ஜனநாயகம் மற்றும் சர்வாதிகாரம் ஆகியவற்றில் ஒன்றை தேர்ந்தெடுப்பதற்கான காலகட்டத்தில் உலகம் இன்று உள்ளது''**
***– நான்சி பெலோசி***

### ஜி 7 நாடுகள் கண்டனம்

இதேவேளை, தாய்வானை சுற்றிவளைத்து நடத்தும் பயிற்சிகள் உலகின் பரபரப்பான நீர்வழிப் பாதைகளில் நடைபெறும் என சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

சீனாவின் நடவடிக்கை பிராந்திய அமைதியை சீர்குலைக்கும் அபாயமுள்ளதாக ஜி 7 நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. தாய்வான் மீது சீனா போர் தொடுத்தால் அது ஒட்டுமொத்த உலக நாடுகளையும் முடங்க வைக்கும் என்ற தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன.

### ஜனநாயகமா? சர்வாதிகாரமா?

இந்நிலையில், ''தாய்வான் உள்ளிட்ட உலக நாடுகளில் ஜனநாயகத்தைப் பாதுகாக்க அமெரிக்கா இரும்புக் கவசம் போல் செயற்படும்'' எனத் தெரிவித்துள்ள நான்சி, ''ஜனநாயகம் மற்றும் சர்வாதிகாரம் ஆகியவற்றில் ஒன்றை தேர்ந்தெடுப்பதற்கான காலகட்டத்தில் உலகம் இன்று உள்ளது'' எனவும் தெரிவித்துள்ளார்.

சீனாவின் கடும் எதிர்ப்பையும் மீறி செவ்வாய்க்கிழமை தாய்வானுக்குச் சென்ற நான்சி, அந்நாட்டு ஜனாதிபதி சைஇங்-வென்னை சந்தித்துப் பேசினார்.

பின்னர் அங்கு செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர், தாய்வான் உள்ளிட்ட உலக நாடுகளில் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதில் அமெரிக்காவின் நிலைப்பாடு இரும்புக் கவசம் போல் இருக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

ஆனால், நான்சியின் தாய்வான் பயணம் சீனாவின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டுக்கு எதிரானது என்று சீனா கண்டனம் தெரிவித்துள்ளது.

### அபாயகரமான 6 வான்வழித் தடங்கள்

தாய்வான் அருகே ஏவுகணை சோதனை, இராணுவ ஒத்திகை மேற்கொள்ளவிருப்பதால் தாய்வான் வான்பகுதியில் பறப்பதை தவிர்க்குமாறு ஆசிய நாடுகள் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள விமான நிறுவனங்களை சீனா அறிவுறுத்தியுள்ளது. தாய்வானை ஒட்டிய 6 வான்வழித் தடங்களை அபாயகரமான மண்டலமாக சீனா அறிவித்துள்ளது.

இதனால் நேற்று இரவுமுதல் ஓகஸ்ட் 7ஆம் திகதி நள்ளிரவுவரை கொரியா தனது விமானங்களை இரத்துசெய்துள்ளது. இதேபோல், தென்கொரியா, தாய்லாந்து ஆகிய நாடுகளும் பல விமானங்களை மாற்றுவழித் தடங்களில் இயக்க முடிவு செய்துள்ளன. ஆனால், வழக்கம்போல் விமானங்கள் இயக்கப்படும் என்று ஜப்பான் அறிவித்துள்ளது.

### பொருளாதாரத் தடை

நான்சியின் தாய்வான் வருகையால், நான்சியின் பயணத்தையடுத்து இயற்கை மணல் ஏற்றுமதிக்கு தடை உட்பட பல்வேறு பொருளாதாரத் தடைகளை தாய்வான் மீது சீனா விதித்துள்ளது.

அத்தோடு, தாய்வானிலிருந்து பழங்கள், மீன் பொருட்களின் இறக்குமதியையும் தற்போது நிறுத்தியுள்ளது.

தாய்வானில் இறக்குமதியாகும் இயற்கை மணலில் 90 சதவீதத்துக்கும் மேல் சீனாவிலிருந்து பெறப்படும் நிலையில், மணல் ஏற்றுமதிக்கும் தடை விதித்துள்ளது.



மேலும் தாய்வானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சுமார் 2000 உணவுப் பொருட்களுக்கு தடை விதித்துள்ள சீனாவால், அமெரிக்கா மற்றும் தாய்வான் மீது கடுமையான பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை.

ஏற்கனவே பொருளாதார சிக்கல் மற்றும் விநியோக சங்கிலி பாதிப்பால் சீனாவுக்கு சிக்கல்கள் உள்ளதால், இராணுவ நடவடிக்கையை முன்னிறுத்தியே சீனா தனது பதிலடியை கொடுக்கும் என்று கூறப்படுகிறது

இதனிடையே, சீனாவின் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் போர் விமானங்கள் புடைசூழ தாய்வான் சென்ற நான்சி, நேற்றுமுன்தினம் தனி விமானம் மூலம் அமெரிக்கா புறப்பட்டுச் சென்றார். தமது தாய்வான் பயணம் குறித்து ட்விட்டரில் பதிவிட்டுள்ள அவர்,

''தமது குழு தாய்வான் ஜனாதிபதியுடன் தனித்துவமான சிறந்த சந்திப்பை மேற்கொண்டுள்ளது. அமெரிக்கா - தாய்வான் இடையே பொருளாதார, பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் ஜனநாயக மாண்பு பரிமாற்றம் ஆகியவை குறித்து முக்கிய பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது

எனவும் நான்சி குறிப்பிட்டுள்ளார்.

### சீனா போர் ஒத்திகை

அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசி தாய்வானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட நிலையில், சீனா போர் ஒத்திகையில் ஈடுபட்டு வருகிறது. அதனால் பதற்றமான சூழல் நிலவி வருகிறது.

சீனாவுடன் தாய்வான் தீவை இணைக்கும் முயற்சியில் சீனா ஈடுபட்டுவரும் நிலையில், ஆசிய நாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் நான்சி, தாய்வானுக்குச் செல்வார் என்று அண்மையில் தகவல் வெளியானது. இதற்கு சீனா கடும் தெரிவித்தது.

எனினும், சுற்றுப் பயணத்தின் ஒரு பகுதியாக வியாழக்கிழமை மலேசியா சென்ற நான்சி, அங்கிருந்து அதிகாரபூர்வமாக அறிவிக்காமல் தாய்வானுக்குச் சென்றார்.

சீனாவின் கடுமையான எதிர்ப்பை மீறி தாய்வானுக்கு நான்சி பயணித்ததை தொடர்ந்து, ஏற்கனவே கூறியதைபோல் அமெரிக்காவுக்கு கடுமையான பதிலடி கொடுக்கப்படும் என்று சீன வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் ஹுவா சன்யிங் தெரிவித்துள்ளார்.

### தாய்வான் வான்வெளியில் பறந்த சீனப் போர் விமானங்கள்

இந்நிலையில்தான் சீனாவின் எதிர்ப்பையும் மீறி தாய்வானுக்கு அமெரிக்க சபாநாயகர் நான்சி பெலுசி சென்றுள்ளார். இதனை காரணமாக வைத்து சீனா, தாய்வான் மீது போர் தொடுக்க வாய்ப்புள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. இதற்கு முன்னோட்டமாகத்தான் நேற்று நான்சி தைபே நகருக்கு சென்றபோது சீனாவின் 21 போர் விமானங்கள் தாய்வான் வான் எல்லையில் பறந்தன. இது சீனாவின் போர் முன்னோட்டம் என சிலர் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், சீன போர் விமானங்கள் தாய்வானை சுற்றிவளைத்து போர் ஒத்திகையில் ஈடுபட்டுள்ளதால் பதற்றம் அதிகரித்துள்ளது. இந்த போர் ஒத்திகை 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தாய்வான் தீவை சுற்றியும் சீனாவின் முப்படைகளும் போர் ஒத்திகையில் ஈடுபட்டு வருவதற்கு பல்வேறு நாடுகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

சீன உள்நாட்டுப் போருக்குப் பின்னர் தாய்வான் தனிநாடாக செயற்பட்டு வருகிறது. எனினும், அந்தத் தீவை தங்கள் நாட்டின் ஓர் அங்கமாக சீனா கருதி வருகிறது.

தாய்வானை தாங்கள் எப்போது வேண்டுமானாலும் இணைத்துக்கொள்ளலாம் என்றும் அதற்குத் தேவைப்பட்டால் இராணுவ பலத்தைப் பயன்படுத்தவும் தயங்கப்போவதில்லை என்றும் சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உலக செய்திகள்

## புட்டினுக்கு வந்த சோதனை

அமெரிக்காவின் நியூயோர்க் நகரிலுள்ள விளையாட்டு மைதானமொன்றில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் பீரங்கியில் சவாரி செய்வதுபோல், இரத்த சிவப்பு நிறத்தில் சிலை நிறுவப்பட்டுள்ளது.

புட்டினை கிண்டலடிக்கும் விதமாக வடிவமைக்கப்பட்டுள்ள இந்தச் சிலை மீது பொம்மை துப்பாக்கியால் தண்ணீரை பீய்ச்சி அடித்தும் தலையில் மண்ணை வாரி இறைத்தும் குழந்தைகள் விளையாடி மகிழ்கின்றன.





## அல்-கொய்தா தலைவர் ஜவாகிரியை காட்டிக்கொடுத்த நாளிதழ் படிக்கும் பழக்கம்

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதலில் அல்-கொய்தா அமைப்பின் தலைவர் ஐமான் அல்-ஜவாகிரி கொல்லப்பட்ட சம்பவத்தில், அவரது நாளிதழ் படிக்கும் பழக்கமே அவர் இருக்குமிடத்தைக் காட்டிக் கொடுத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதலில் அல்-கொய்தா தலைவர் ஐமான் அல்-ஜவாகிரி கொல்லப்பட்டதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்தார். இதனையடுத்து உலக நாடுகளிலுள்ள அமெரிக்க குடிமக்கள் விழிப்புடன் இருக்கும்படி அந்நாட்டு வெளியுறவு அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஆப்கான் தலைநகர் காபூலில் அல்கொய்தா தலைவர் அல்-ஜவாஹிரி (வயது 74), ஓர் இல்லத்தில் பாதுகாப்பாக தங்கவைக்கப்பட்டிருந்தார். அந்த வீட்டைக் கண்டுபிடிக்க அமெரிக்க உளவுத்துறையான சிஐஏ பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டது. அதில், அவரது அன்றாட பழக்கவழக்கங்கள் குறித்த விவரங்கள் பெரிதும் உதவியதாக ஆங்கில நாளிதழ் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அதாவது, அல்-ஜவாஹிரி நாள்தோறும் அதிகாலையில் வீட்டு பல்கனியில் யாரும் இல்லாமல் தனியாக அமர்ந்து நாளிதழ்களைப் படிக்கும் வழக்கம் கொண்டிருந்ததாகக் கிடைத்த தகவலையடுத்து, காபூலில் பல்கனிகொண்ட வீடுகள் கணக்கெடுக்கப்பட்டு செயற்கைக்கோள் மூலம் கண்காணிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பல்கனி இருக்கும் வீடுகளைக் கண்டறிந்து, பின்னர் அதில் அதிகாலையில் நாளிதழ் படிக்கும் நபர்கள் இருக்கிறார்களா என பிரித்து, பின்னர், நாளிதழ் படிக்கும் நபர், வீட்டை விட்டு வெளியேறாதவர் என்ற கோணத்தில் சிஐஏ மிகத் துல்லியமாக அல்-ஜவாஹிரி தங்கியிருந்த அந்த வீட்டைக் கண்டுபிடித்துள்ளது.

அதன்படிதான், காபூலில் அந்த மிகப்பெரிய திட்டம் நிறைவேற்றப்பட்டது. சிஐஏ பறக்கவிட்ட ட்ரோன், அல்-ஜவாஹிரி இருந்த பல்கனிக்கு அருகே சென்றது, அவர் இருப்பதை உறுதிசெய்தது. பின்னர் இரண்டு ஆண்டுகள் தேடுதல் பணி முடிந்தது.

வழக்கமாக, மிக முக்கிய பயங்கரவாதிகளைத் தேடும்போது, அவர்களது அன்றாட பழக்க வழக்கங்களை அடிப்படையாக வைத்தே, அவர்களைக் கொல்லும் திட்டமே தீட்டப்படும். அந்தவகையில்தான், ஜவாஹிரியின் பல்கனியில் நாளிதழ் படிக்கும் பழக்கம் அவர் இருக்கும் வீட்டைக் கண்டறியவும் அவரைக் கொல்வதற்கான திட்டத்தைத் தீட்டவும் மிகக் கச்சிதமாக அமைந்துள்ளது.

ஏற்கனவே, அல்-கொய்தா அமைப்பை நிறுவிய பின்லேடன் அமெரிக்க சிறப்புப் படையினரால் பாகிஸ்தானில் கடந்த 2011ஆம் ஆண்டு கொல்லப்பட்ட நிலையில், தற்போது அல்-ஜவாஹிரியும் கொல்லப்பட்டுள்ளது அந்த அமைப்புக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது.

# அரச அதிகாரிகளின் நடவடிக்கைகள் காரணமாக சர்வதேச உதவி, ஒத்துழைப்புகளை இழக்க நேரிடலாம்

## அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை சுட்டிக்காட்டு

සමස්ත ලංකා ජම්ඉයියතුල් උලමා
அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா
ALL CEYLON JAMIYYATHUL ULAMA
جمعية علماء سريلانكا
(Incorporated by Act of Parliament No.:51 of 2000)

நமது நாடு எதிர்நோக்கியிருக்கும் பொருளாதார நெருக்கடியிலிருந்து வெளிவர சர்வதேசத்தின் உதவியும் ஒத்துழைப்பும் மிக அவசியமாக இருக்கின்ற இந்நிலையில், ஜனநாயக விழுமியங்களுக்கு மாற்றமாக அரச அதிகாரிகள் செயற்படுவதன் காரணமாக சர்வதேசத்தின் உதவியையும், ஒத்துழைப்பையும் நாம் இழக்க நேரிடலாம் - என அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் உலமா சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த காலங்களில் நமது நாட்டில் ஏற்பட்ட பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளின் காரணமாக இந்நாட்டு மக்கள் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு கோரியும், அரசியல் முறைமையில் மாற்றத்தை வேண்டியும் முழு நாட்டிலும் மக்கள் பல மாதங்களாக ஜனநாயக விழுமியங்களுக்கேற்ப தமது ஆதங்கங்களை வெளிப்படுத்தி வந்தனர். இதன் விளைவாக அரசியல் ரீதியாக சில மாற்றங்கள் ஏற்பட்டாலும் இன்னும் பல மாற்றங்கள் ஏற்பட வேண்டுமென்று நாட்டுப் பிரஜைகள் எதிர்பார்ப்பதோடு, பொருளாதார ரீதியான நெருக்கடிக்கு சரியான தீர்வைப் பெறாததன் காரணமாக தொடர்ந்து போராடியும் வருகின்றனர்.

இந்நிலையில், போராட்டத்தில் மும்முரமாக ஈடுபட்டவர்கள் நியாயமற்ற முறையில் குறிவைக்கப்பட்டு கைதுசெய்யப்படுகிறார்கள் என்று பௌத்த, கிறிஸ்தவ மற்றும் ஏனைய மதத் தலைவர்கள், சட்டத்தரணிகள், விசேட வைத்திய நிபுணர்கள், ஏராளமான சிவில், சமூக அமைப்புகள் மற்றும் வெளிநாட்டு மனித உரிமை அமைப்புகள் தமது அதிருப்தியையும் எதிர்ப்பையும் வெளிப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது நமது நாடு எதிர்நோக்கியிருக்கும் பொருளாதார நெருக்கடியிலிருந்து வெளிவர சர்வதேசத்தின் உதவியும் ஒத்துழைப்பும் மிக அவசியமாக இருக்கின்ற இந்நிலையில், ஜனநாயக விழுமியங்களுக்கு மாற்றமாக அரச அதிகாரிகள் செயற்படுவதன் காரணமாக சர்வதேசத்தின் உதவியையும், ஒத்துழைப்பையும் நாம் இழக்க நேரிடலாம்.

ஆகவே, இந்நாட்டின் அரச அதிகாரிகள் மற்றும் பொறுப்பில் உள்ளவர்கள் ஜனநாயக விழுமியங்களையும் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட மனித அடிப்படை உரிமைகளையும் பேணி நேர்மையாகவும் நியாயமாகவும் நடந்துகொள்ளுமாறும், இப்போராட்டத்துக்குக் காரணமாக இருக்கின்ற அனைத்து விடயங்களுக்கும் வெகு சீக்கிரமாக தீர்வு வழங்குமாறும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா வினயமாக வேண்டிக்கொள்கின்றது.

நம் நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான இந்நிலை அவசரமாக நீங்கி, நம் தாய்நாட்டுக்கும் முழு உலகுக்கும் சுபீட்சமும் அபிவிருத்தியும் ஏற்படவேண்டுமென்றும், இந்நாட்டில் நீதியும் நியாயமும் நிலைநாட்டப்பட வேண்டுமென்றும் சிறப்பான இம்முஹர்ரம் மாதத்தில் எல்லாம் வல்ல அல்லாஹு தஆலாவிடம் நாம் பிரார்த்தனை செய்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாலைதீவின் திலாபுஷி தீவில் நடமாடும் கொன்சியூலர், தொழிலாளர் சேவைகள்





மாலைதீவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் மாலைதீவிலுள்ள திலாபுஷி தீவில் நடமாடும் கொன்சியூலர் மற்றும் தொழிலாளர் சேவைகளை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது.

2022 மார்ச் 17ஆம் திகதி ஹுல்ஹு மாலே தீவில் மிகவும் வெற்றிகரமாக இடம்பெற்ற தொடக்க நிகழ்விற்குப் பின்னர், இதுபோன்ற நடமாடும் சேவை இடம்பெற்ற இரண்டாவது சந்தர்ப்பம் இதுவாகும்.



புதிய கடவுச்சீட்டு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுதல், இலங்கை சாரதி அனுமதிப்பத்திரங்களை மாற்றியமைத்தல், சான்றிதழ்களை சான்றளித்தல் மற்றும் தொழிலாளர் தொடர்பான பிரச்சினைகளை கவனித்தல் உட்பட பல சேவைகளை உயர்ஸ்தானிகரின் தலைமையிலான தூதரகக் குழுவினர் இலங்கையர்களுக்கு இதன்போது வழங்கினர்.

பெருமளவிலான இலங்கையர்கள் பணிபுரியும் இரண்டு படகு கட்டுமானம் மற்றும் பழுதுபார்க்கும் தளங்களையும் குழுவினர் பார்வையிட்டனர்.

இலங்கை - மாலைதீவு கூட்டு முயற்சி நிறுவனமான கீல் மெரைன் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் முகாமையாளர் அசங்க பெர்னாண்டோ இந்த நடமாடும் சேவையை நடத்துவதற்காக நிறுவனத்தின் அலுவலக இடத்தை இலவசமாக வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

திலாஃபுஷி என்பது மாலேயின் மேற்கில் அமைந்துள்ள மாநகர நிலப்பரப்பு தொழில்துறைப் பகுதியாக உருவாக்கப்பட்ட ஒரு செயற்கைத் தீவு ஆகும். படகு உற்பத்தி, சீமெந்துப் பொதியிடல், மித்தேன் எரிவாயு போத்தல் மற்றும் பல்வேறு பெரியளவிலான கிடங்கு ஆகியன தீவின் முக்கிய தொழில்துறை நடவடிக்கைகளாகும்.

# உத்திக பிரேமரத்ன எம்.பி. ஜப்பானுக்கு விஜயம்; இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை

அநுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன தற்போது 2022 ஜூலை 31 முதல் ஒகஸ்ட் 11 வரை ஜப்பானுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

ஜப்பானில் தங்கியிருக்கும் காலத்தில், இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதுடன், முதலீட்டு வாய்ப்புகள், விவசாயத்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் ஆரம்ப கல்வி ஆகியவற்றில் கூட்டுத் திட்டங்களை மேம்படுத்தும் நோக்கில், நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமரத்ன ஜப்பான் அரசாங்கத்தின் பல முக்கிய பிரமுகர்களைச் சந்திக்கவுள்ளார்.

2022 ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி, ஜப்பானின் சுற்றாடல் அமைச்சர் சுயோஷி யமகுச்சியை சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமரத்ன, இலங்கைக்கான ஜப்பானின் அபிவிருத்தி உதவிகளைப் பாராட்டுவதற்கான வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டார். நிலையான அபிவிருத்தி இலக்குகளின் குடையின் கீழ், நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமரத்ன, கழிவு மீள்சுழற்சியில் தொழில்துறை ஆலைகளை நிறுவுதல் மற்றும் மீழ்சுழற்சி செய்யமுடியாத கழிவுகளை புதுப்பிக்கத்தக்க ஆற்றலாக மாற்றுதல் போன்ற பல்வேறு தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல் ஆகியன குறித்து பரிசீலிப்பதற்காக ஜப்பானுக்கு அழைப்பு விடுத்தார். இலங்கையின் அநுராதபுரத்தில் ஏற்றுமதி சார்ந்த உர உற்பத்தியின் சாத்தியக்கூறுகளை விளக்கிய அவர், இந்தத் துறையில் முதலீடுகளை மேற்கொள்வதைப் பரிசீலிக்குமாறு ஜப்பானை வரவேற்றார்.

டோக்கியோவில் தங்கியிருந்தபோது, நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமரத்ன, தாராளவாத ஜனநாயகக் கட்சியின் வெளியுறவுத் துறையின் பதில் பணிப்பாளரும், முன்னாள் நாடாளுமன்ற பிரதி அமைச்சருமான ஆளும் தாராளவாத ஜனநாயகக் கட்சியின் பிரதிநிதிகள் சபை உறுப்பினர் சடோஷி புஜிமாருவைச் சந்தித்தார். அநுராதபுர மாவட்டத்தில் முன்பள்ளிக் கல்வி, கற்பித்தல் முறைகள் மற்றும் வசதிகளை மேம்படுத்தி ஜப்பானின் முன்பள்ளிக் கல்வி முறையைப் போன்றதொரு நிலையை எட்டுவதற்கு ஜப்பானின் உதவியை நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமரத்ன நாடினார். உயர்மட்டக் கூட்டங்களை ஒருங்கிணைத்த, பிராந்திய மறுமலர்ச்சி, ஒழுங்குமுறை சீர்திருத்தங்களுக்கான முன்னாள் அமைச்சர் கோசோ யமமோட்டோவும் இச்சந்திப்பில் கலந்துகொண்டார். ஜப்பானிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் பொறுப்பதிகாரி சேசத் தாம்புகல, நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமரத்னவுடன் சந்திப்புகளின் போது கலந்துகொண்டார்.

டோக்கியோவிலுள்ள இலங்கைத் தூதரகத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த ஆறு இலங்கை - ஜப்பான் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் 2022 ஒகஸ்ட் முதலாம் திகதி தூதரக வளாகத்தில் கலந்துரையாடுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்விலும் நாடாளுமன்ற உறுப்பினர் கலந்துகொண்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமரத்ன ஜப்பானின் வெளிவிவகார அமைச்சரை 2022 ஒகஸ்ட் 10ஆம் திகதி சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஜப்பானிலுள்ள ஃபுகுவோகா மாகாணத்தில் உள்ள கிட்டா-கியூ நகரத்திற்கான தனது விஜயத்தின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமரத்ன பல பிராந்திய மேயர்களையும் அரசாங்க அதிகாரிகளையும் சந்திக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையர்களுக்கான வேலைவாய்ப்புகளை அதிகரிப்பது குறித்து கொரியா பரிசீலனை

## அமைச்சர் அலி சப்ரியிடம் தூதுவர் வூன்ஜின் ஜியோங் தெரிவிப்பு




கொழும்பிலுள்ள கொரியத் தூதுவர் வூன்ஜின் ஜியோங், இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரியை அண்மையில் அமைச்சில் வைத்து மரியாதை நிமித்தம் சந்தித்தார்.

அரசியல், பொருளாதாரம், வேலைவாய்ப்பு, கல்வி, அறிவுப் பரிமாற்றம் மற்றும் மக்களுடனான தொடர்புகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை ஆழமாக்குதல் குறித்து இரு தரப்பினரும் கருத்துகளைப் பரிமாறிக்கொண்டனர்.

அமைச்சர் சப்ரி, கடந்த சில ஆண்டுகளில் இருதரப்பு ஈடுபாடுகளின் மட்டத்தில் திருப்தியை வெளிப்படுத்தியதுடன், இலங்கைக்கும் தென் கொரியாவிற்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு பங்காளித்துவத்தை ஒருங்கிணைப்பதன் மூலம் வேகத்தை முன்னெடுப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

இரு நாடுகளுக்கும் இடையே வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றத்தை விரிவுபடுத்துவதற்கான கூட்டுப் பொருளாதாரக் குழுவை புதுப்பிக்கவேண்டிய அவசரத் தேவையை அமைச்சர் சுட்டிக்காட்டினார். இலங்கையர்களுக்கான வேலை வாய்ப்புகளை அதிகரிப்பதற்கு கொரியா சரியான நேரத்தில் பரிசீலித்து வருவதையும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பாராட்டினார். இலங்கைக்கு கொரியா உதவிகளை வழங்குவதை தூதுவர் வூன்ஜின் உறுதியளித்தார்.

# மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் நூர்தீன் மசூரின் வீட்டில் கொள்ளை

## புத்தளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

(ரஸீன் ரஸ்மின்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் பிரதி அமைச்சருமான மர்ஹூம் நூர்தீன் மசூரின் புத்தளம் நாகவில்லு பகுதியிலுள்ள வீட்டை உடைத்து 160 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய தங்க நகைகள், பணம் மற்றும் பொருட்கள் என்பன திருடப்பட்டுள்ளதாக புத்தளம் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் புத்தளம் தலைமையகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

வன்னி மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினரான மர்ஹூம் நூர்தீன் மசூர், கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு திடீரென மாரடைப்பால் மரணமடைந்துள்ளார்.

பல வர்த்தகங்களுக்கு உரிமையாளரென சொல்லப்படும் மர்ஹூம் நூர்தீன் மசூரின் புத்தளம் நாகவில்லு வீட்டில் அவரது மரணத்திற்குப் பின்னர் அவரது மனைவி வீட்டில் வசித்துவந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், முன்னாள் அமைச்சரின் மனைவி வீட்டில் இல்லாதபோது, வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர்கள் தங்க நகைகள், பணம் மற்றும் பொருட்கள் என்பனவற்றை திருடிச் சென்றுள்ளதாக செய்யப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது என பொலிஸார் கூறினர்.



தங்க நகைகள் உட்பட பிற பொருட்களுடன் 3 இலட்சத்து 6 ஆயிரம் ரூபா பணமும் உள்ளடங்குவதாகவும், அந்த பணம் வைக்கப்பட்டிருந்த 25 இலட்சம் ரூபா பெறுமதியுடைய பெட்டகம் உடைக்கப்பட்டுள்ளதால் அதற்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறாயினும், கிடைத்த தகவலின் அடிப்படையில், திருடப்பட்ட ஒருசில பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

அத்துடன், இந்த திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் 10 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அவர்களை கைதுசெய்ய நடவடிக்கைகள் எடுத்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இந்த கொள்ளைச் சம்பவம் தொடர்பில் புத்தளம் தலைமையகப் பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையில் குற்றப்பிரிவினரும், பொலிஸ் தடயவியல் பிரிவினரும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.






ஒருகொடவத்தை (தமிழ் நாடு) நவகளனிபுரவில் அமைந்துள்ள ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தின் ஆடிப்பூர அலங்கார உற்சவமும் பாற்குட பவனியும் கடந்த திங்கட்கிழமை காலை சிவஸ்ரீ சிவநேசக் குருக்கள் தலைமையில் நடைபெற்றன. இந்நிகழ்வில் நவகளனிபுர ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தில் சிறப்புப் பூஜை வழிபாடு இடம்பெற்று, வதுள்ளவத்தை ஸ்ரீ பத்ரகாளி அம்மன் தேவஸ்தானத்தை நோக்கி பாற்குட பவனி வலம் வந்ததுடன் அங்கபிரதர்ச்சனை வழிபாடு இடம்பெற்றது.

(படங்கள் - ஏ.எஸ்.எம்.ஜாவித்)

# Commonwealth Games – 2022

## ஒரே இரவில் இலங்கைக்கு இரு பதக்கங்கள்



## 100 மீற்றரில் முதல் இலங்கையராக பதக்கம் வென்ற யுபுன்

22ஆவது பொதுநலவாய விளையாட்டு விழாவின் நேற்று முன்தினம் ஆறாவது நாளில் இலங்கைக்கு இரு பதக்கங்கள் கிடைத்தன. அதன்படி, இலங்கை மொத்தமாக 03 பதக்கங்களை வென்றுள்ளது.

ஆண்களுக்கான 100மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் தெற்காசியாவின் அதிவேக மனிதன் என்ற பெருமையை பெற்றுள்ள இலங்கை வீரர் யுபுன் பிரியதர்ஷன அபேகோன் வெண்கலப்பதக்கத்தை வென்றார். இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை நடைபெற்ற இறுதிப்போட்டியில் குறித்த 100மீற்றர் பந்தைய தூரத்தை 10.14 செக்கன்களில் நிறைவுசெய்து வெண்கலப் பதக்கத்தை வெற்றிக்கொண்டார்.

நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற 3ஆவது அரையிறுதியில் போட்டியிட்ட யுபுன் அபேகோன் 4ஆவது இடத்தை பிடித்திருந்த போதும், இறுதிப்போட்டிக்கான வாய்ப்பை தக்கவைத்திருந்தார்.

நேரடி தகுதியை பெறாவிட்டாலும், சிறந்த நேரப்பிரதியை கொண்டிருந்ததால், இறுதிப்போட்டிக்கான வாய்ப்பு இவருக்கு கிட்டியிருந்தது.

இறுதிப்போட்டியில் கென்ய வீரர் பெர்டினாண்ட் ஓமயாலா போட்டித் தூரத்தை 10.02 செக்கன்களில் கடந்து தங்கம் வென்றிருந்ததுடன், தென்னாபிரிக்க வீரர் அகானி சிம்பைன் 10.13 செக்கன் களில் போட்டித்தூரத்தை கடந்து வெள்ளிப்பதக்கத்தை வென்றார்.

பொதுநலவாய போட்டிகளில் சுவட்டு நிகழ்ச்சிகளில் இலங்கைக்கு பதக்கம் வென்றுகொடுத்த நான்காவது வீரர் என்ற பெருமையை யுபுன் பெற்றுக்கொடுத்ததுடன், 1998ஆம் ஆண்டுக்கு பின்னர் முதன்முறையாக இலங்கை வீரர் ஒருவர் சுவட்டு போட்டியொன்றில் பதக்கம் வென்ற பெருமையையும் யுபுன் அபேகோன் பெற்றுக்கொண்டார்.

மேலும், பொதுநலவாய விளையாட்டு விழாவின் 100மீற்றர் ஓட்டத்தில் இலங்கைக்கு பதக்கம் வென்றுகொடுத்த முதல் வீரர் என்ற பெருமையையும் யுபுன் அபேகோன் பெற்றுக்கொண்டார்.



## மாற்றுத்திறனாளியாக வெள்ளி வென்ற பாலித்த

மாற்றுத்திறனாளிகளுக்கான பரா பரிதி வட்டம் எறிதல் போட்டியில் எப்42 பிரிவு போட்டியில் பங்கேற்ற இலங்கை வீரர் பாலித்த பண்டார, வெள்ளிப் பதக்கம் வென்று 2022 பொதுநலவாய விளையாட்டு விழாவில் இலங்கைக்கு முதல் வெள்ளிப் பதக்கத்தை வென்றுகொடுத்தார்.

பாலித்த பண்டார தனது முதல் முயற்சியில் 39.54 மீற்றர் தூரத்துக்கு பரிதி வட்டத்தை எறிந்து குறைந்த தூரத்துடன் போட்டியை ஆரம்பித்திருந்தாலும், அடுத்தடுத்த வாய்ப்புகள் ஒவ்வொன்றிலும் தூரத்தை அதிகரித்துக்கொண்டு 44.20 மீற்றர் தூரம் வீசி இவ்வாறு வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

இந்தப்போட்டியில், வேல்ஸ் நாட்டைச் சேர்ந்த அலெட் டேவிஸ் மற்றும் ஹெரிஸன் வோல்ஸ் ஆகியோர் முறையே தங்கம் மற்றும் வெண்கலப் பதக்கம் ஆகியவற்றை வெற்றிகொண்டனர்.

## பாடசாலை ரக்பி தொடரின் சுப்பர் லீக் சுற்று நாளை ஆரம்பம்

டயலொக் நிறுவனத்தின் அனுசரணையில் கடந்த ஜூன் மாதம் முதல் நடைபெற்றுவரும் பாடசாலை ரக்பி லீக் - 2022 தொடரின் முதல் சுற்றுப் போட்டிகள் அனைத்தும் நிறைவடைந்துள்ள நிலையில், நாளை முதல் சுப்பர் லீக் சுற்றுப் போட்டிகள் ஆரம்பமாகின்றன.

ஆறு வாரங்கள் நடைபெற்ற முதல் சுற்று முடிவுகளின்படி, குழு 1 ஏ பிரிவில் கொழும்பு ரோயல் கல்லூரி மற்றும் சென். ஜோசப் கல்லூரி ஆகியன சுப்பர் லீக் சுற்றுக்கு தகுதிபெற்றன. மறுமுனையில் குழு 2 ஏ பிரிவில் இஸிப்பத்தான கல்லூரி 5 போட்டிகளில் 5 வெற்றிகளை குவித்து முதலிடத்தை கைப்பற்றியும் வெஸ்லி கல்லூரி இரண்டாமிடத்தை கைப்பற்றியும் சுப்பர் லீக் சுற்றுக்கு தகுதிபெற்றன.

அந்த வகையில், நாளைய தினம் நடைபெறும் சுப்பர் லீக் சுற்றின் முதல் ஆட்டத்தில் வெஸ்லி கல்லூரி மற்றும் ரோயல் கல்லூரி ஆகியன சி.ஆர்.என்ட் எப்.சி. மைதானத்தில் பலப்பரீட்சை நடத்துகின்றன.

Dialog SCHOOLS RUGBY

## 17 ஆண்டுகளின் பின் மீண்டும் பாகிஸ்தான் செல்லும் இங்கிலாந்து அணி




இங்கிலாந்து கிரிக்கெட் அணியானது 17 ஆண்டுகளின் பின் பாகிஸ்தான் மண்ணுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஏழு போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரில் விளையாடுகிறது. அதன்படி, அடுத்த மாதம் 20ஆம் திகதி முதல் ஒக்டோபர் மாதம் 2ஆம் திகதி வரையில் குறித்த ஏழு இருபதுக்கு 20 போட்டிகளும் கராச்சி மற்றும் லாஹூரில் நடைபெறவுள்ளன.

அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள இருபதுக்கு 20 உலகக் கிண்ணத் தொடருக்கு தயாராகும் வகையில் குறித்த தொடர் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதன் பின்னர் இங்கிலாந்து அணி மீண்டும் டிசம்பர் மாதத்தில் பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரிலும் ஆடவுள்ளது.

இங்கிலாந்தின் ஆடவர், மகளிர் கிரிக்கெட் அணிகள் கடந்த ஆண்டு பாகிஸ்தானுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணங்களை மேற்கொள்ளவிருந்தபோதிலும் குறித்த சுற்றுப்பயணங்கள் வீர, வீராங்கனைகள் கொவிட்-19 பாதுகாப்பு வலயத்திற்குள் இருந்ததன் மூலம் ஏற்பட்ட அழுத்தம் மற்றும் வீர, வீராங்கனைகளின் உளநலம் என்பவற்றினை கருத்திற்கொண்டு இரத்துச் செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## 2030 உலகக்கிண்ணத்தை நடத்தும் முயற்சியில் ஆர்ஜென்ரீனா, சிலி, உருகுவே, பராகுவே




(ரமணி)

ஆர்ஜென்ரீனா, சிலி, உருகுவே, பராகுவே ஆகியவை 2030ஆம் ஆண்டு உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியை நடத்துவதற்கு முன்னோடியில்லாத வகையில் முயற்சியை முறையாகத் தொடங்கியுள்ளன. உருகுவேயில் மான்டிவீடியோவின் எஸ்டாடியோ சென்டனாரியோவில் நடந்த உலகக்கிண்ண முதலாவது இறுதிப் போட்டியில் ஆர்ஜென்ரீனாவுக்கு எதிராக 4-2 என்ற கோல் கணக்கில் உருகுவே சம்பியனாகியது.

தென் அமெரிக்க கால்பந்து கூட்டமைப்பு தலைவர் டொமிங்குஸ் மான்டிவீடியோவின் எஸ்டாடியோ சென்டனாரியோவில் வெளியீட்டு நிகழ்வொன்றுக்கான இடத்தில் உரையாற்றும்போது, 2030இல் உலகக் கோப்பையை நடத்துவது ஒரு கண்டத்தின் கனவு என்று பரிந்துரைத்தார்.

இன்னும் உலகக் கோப்பைகள் இருக்கும். ஆனால், கோப்பை ஒரு முறை மட்டுமே 100ஆக மாறும். அது வீட்டிற்கு வர வேண்டும் என்று பராகுவேயரான டொமிங்குஸ் கூறினார். மரியோ கெம்பஸ் 1978 உலகக் கோப்பையில் ஆர்ஜென்ரீனாவுக்காக விளையாடினார். ஒரு கூட்டு தென் அமெரிக்க முயற்சியின் சாத்தியம் முதலில் உருகுவே, ஆர்ஜென்ரீனாவால் 2017 அறிவிக்கப்பட்டது. சிலியும் பராகுவேயும் இந்தத் திட்டத்தில் இணைந்துள்ளன.

1978இல் ஆர்ஜென்ரீனாவிலும், சிலியில் 1962ஆம் ஆண்டும் உலகக்கிண்ணப் போட்டி நடைபெற்றது. பராகுவேயில் இதுவரை உலகக் கிண்ணப் போட்டி நடைபெறவில்லை. மறுமுனையில் 2030ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டியை நடத்துவதற்கு ஸ்பெய்னும் போர்த்துக்கலும் விரும்புகின்றன.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com



பாசிக்குடா கடற்கரையில் அண்மையில் இடம்பெற்ற 2022ஆம் ஆண்டுக்கான மாகாண மட்ட விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான கடற்கரை கபடி போட்டியில் அம்பாறை மாவட்ட அணி சார்பாக கலந்து கொண்ட நிந்தவூர் மதீனா கழகம் இறுதிப் போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட அணியை வீழ்த்தி அம்பாறை மாவட்ட கபடி வரலாற்றில் முதன் முறையாக மாகாண சம்பியன் பட்டத்தை பெற்று தேசிய மட்ட போட்டிக்கு தெரிவாகியுள் ளது. (படம் - மாளிகைக்காடு நிருபர்)

## செஸ் ஒலிம்பியாட்டை திரும்பிப் பார்க்க வைத்த மூதாட்டி

(ரமணி)

சென்னையில் தொடங்கிய 44ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டி சிறப்பாக நடைபெற்று வரும் நிலையில், 78 வயதான மூதாட்டி ஒருவர் இந்த போட்டியில் பங்கேற்று அசத்தி வருகிறார். மொனாக்கோவைச் சேர்ந்த மூதாட்டி ஜூலியா லேபல் அரியாஸ் பங்கேற்று தனது திறமையை வெளிக்காட்டி வருகிறார்.

இது பார்வையாளர்கள் மட்டுமல்லாது போட்டியாளர்களையும் உற்சாக மாக்கியுள்ளது.

1927 முதல் நடத்தப்பட்டு வரும் கௌரவமிக்க இந்தப் போட்டி, ஆசியாவில் 30 ஆண்டுகளுக்குப் பிறகும், இந்தியாவில் முதல் முறையாகவும் நடைபெறுகிறது. இதில் 187 நாடுகள் பங்கேற்கின்றன.

எந்த செஸ் ஒலிம்பியாட் போட்டிகளையும் விட இது அதிக எண்ணிக்கையைக் கொண்டதாகும். இதில் 1700க்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்கின்றனர். உலகின் தலைசிறந்த அணியான ரஷ்யாவும், சீனாவும் இந்த ஒலிம்பியாடில் கலந்துகொள்ளவில்லை. ஆனால், ஏறக்குறைய எல்லா முன்னணி நாடுகளும் தங்கள் சிறந்த வீரர்களுடன் கலந்துகொள்ள இருக்கின்றன.

சிறப்பாக நடத்துவரும் செஸ் போட்டியில், 78வயதான மொனாக்கோவைச் சேர்ந்த மூதாட்டி ஜூலியா லேபல் அரியாஸ் பங்கேற்று அசத்தி வருகிறார். விளையாட்டு என்றாலே அது இளைஞர்களுக்கு மட்டுமானது என்று பலரும் நினைத்து வரும் நிலையில் இந்த மூதாட்டி களத்தில் இறங்கியுள்ளார்.

பங்கேற்பாளராக மட்டுமல்லாது, தற்போது வரை விளையாடிய போட்டியில் 2வெற்றியையும் அவர் பதிவு செய்துள்ளார். மூதாட்டியின் இந்த விளையாட்டு பாணி பார்வையாளர்கள் மட்டுமல்லாது சக போட்டியாளர்களையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. பாலஸ்தீனைச் சேர்ந்த 8 வயதுச் சிறுமியும் 78 வயது பாட்டியும் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளனர்.



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7